விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 107 | வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 30 வியாழக்கிழமை (15.11.2012) | பக்கங்கள்: பதினாறு

டெங்கு ஒழிப்புப் பணியில் அணி திரள்வோம்

# இலங்கை அகதிகளுக்காக தமிழக அரசு 25 கோடி ரூபா ஒதுக்கீடு

## சுமார் 2500 வீடுகளை நிர்மாணிக்கத் திட்டம்

(சென்னை)

தமிழக அகதி முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்காக வீட்டுத் திட்டமொன்றை நிர்மாணிக்கத் தீர்மானித்துள்ள தமிழக அரசு, அதற்காக இந்திய அளவில் 25 கோடியை (சுமார் 650 மில்லியன் இலங்கை ரூபா) ஒதுக்கீடு செய்துள்ளது. இது தொடர்பில் தமிழக அரசு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழகத்திலுள்ள அகதிகள் முகாம்களில் தங்கி வாழும் இலங்கைத் தமிழர்கள் நலன் காக்க முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அகதிகள் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகள் தங்கி படிப்பதற்காக ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அகதிகள் முகாம்களிலிருந்து உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல், மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பயன்பெற வகை செய்தல், முகாம்களில் இயங்கி வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கூடுதல் மானியம் வழங்குதல், தமிழக அரசால் பல்வேறு 02



15ஆவது ஆளுநர் மாநாட்டை முன்னிட்டு 'ஒன்றிணைந்த முன்னேற்றத்தை நோக்கி' என்ற அபிவிருத்திக் கண்காட்சி நேற்று யாழ்.நகரிலுள்ள மாநகர சபை வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்ட ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க மற்றும் அரசாங்க அதிபர், மேயர் உள்ளிட்ட பிரமுகர்களை படத்தில் காணலாம்.

# இலங்கையில் காமன்வெல்த் மாநாடு நடத்த பிரிட்டன் எதிர்ப்பு

(லண்டன்)

கொமன்வெல்த் உச்சிமாநாட்டை 2012 இல் இலங்கையில் நடத்துவதற்கு எடுக்கப்பட்ட முடிவு சரியானதல்ல என்று பிரித்தானியா தெரிவித்துள்ளது.

"கொமன்வெல்த்தின் எதிர்காலம் மற்றும் பங்கு" தொடர்பான பிரித்தானிய வெளிவிவகாரக் குழுவின் அறிக்கை நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு வழ்கப்பட்டது. அவ்வறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் மோசமான மனிதஉரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன. அதற்குரிய சாட்சியங்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் 2009ஆம் ஆண்டு உள்நாட்டுப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் நூற்றுக் கணக்கான மக்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டனர்.

காணாமல் போதல், ஆட்கடத்தல், சட்ட விரோத கைது மற்றும் தடுத்து 02

## கம்பளைப் பாடசாலை மாணவிகள் 1026 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

கம்பளை ஜினராஜ மகளிர் கல்லூரியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை விசக் கிருமியின் பாதிப்புக்குள்ளாகிய 1026 மாணவிகள் கம்பளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவர்களில் 900பேர் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர்.

இச்சம்பவத்தை அடுத்து குறித்த பாடசாலை நேற்று முதல் தொடர்ந்து மூன்று தினங்களுக்கு மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்பளை நகரில் வீக்குலுவத்தை பகுதியில் அமைந்துள்ள ஜினராஜ மகளிர் கல்லூரியில் நேற்று மாணவிகள் 02

## இடமாற்றம் 24 மணிநேரத்துக்குள் இரத்து

(கொழும்பு)

கஹவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிரஞ்ஜன் அபேவர்தனவின் இடமாற்றம் உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கஹவத்தை படுகொலைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்திவரும் நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு திடீர் இடமாற்றம் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

இதற்கமைய கஹவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிரஞ்ஜன் அபேவர்தன பொலிஸ் தலைமையகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டார்.

அவரது இடமாற்றமே 24 மணி நேரத்துக்குள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## தெரிவுக்கமிட்டியில் உள்ள எதிர்க்கட்சிகள் மாற்று அறிக்கை?

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிராக விசாரணை நடத்த நியமிக்கப் பட்டிருக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை 'அரசாங்கத்திற்குச் சார்பானதாகவும், பக்கச்சார்பானதாகவும் இருக்குமென்றால் எதிர்க்கட்சிகள் 02

## சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவுக்குள் நுழைந்தால் உடனடியாகத் திருப்பி அனுப்பப்படுவர்

(மெல்போன்)

புகலிடம் கோரி சட்ட விரோதமாக இலங்கையர் எவரும் அவுஸ்திரேலியாவுக்குள் நுழையமுடியாது அவர்கள் அனைவரும் விமானத்திலேயே உடனடியாகத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என அவுஸ்திரேலிய குடிவரவு மற்றும் குடியுரிமை தொடர்பான திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

ஆட்கடத்தலில் ஈடுபடுவோரின் தவறான வழி நடத்தலை நம்பி வள்ளங்களில் சட்ட விரோதமாக வந்து உயிராபத்தில் சிக்க வேண்டாம் என்று கோரியுள்ள அவுஸ்திரேலிய குடிவரவு திணைக்களம், விசா இன்றி சட்ட விரோதமாக வருபவர்கள் குறித்து விசேட கவனம் எதுவும் செலுத்தப்படாது எனவும் 02

## வடமாகாண அபிவிருத்திக் கண்காட்சி நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணத்தில் ஆளுநர் மாநாடு நடைபெறுவதையொட்டி நேற்று முதல் மூன்று தினங்களுக்கு வடமாகாண அபிவிருத்திக் கண்காட்சியை நடத்தப்படுகிறது.

இக்கண்காட்சி உணவு, சுகாதாரம், உட்கட்டமைப்பு, வீடமைப்பு, போக்குவரத்து, கல்வி, மனிதவளம், பொதுச்சேவை, சமூக சேவைகள், கைத்தொழில், நலன்புரி விடயங்களை 02

## வயிற்றோட்டத்தினால் 200 மாணவர்கள் பிபிலையில் பாதிப்பு

(கொழும்பு)

வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்ட 200 மாணவர்களில் 20 பேர் பிபில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வாந்திபேதியினால் பாதிக்கப்பட்ட 200 மாணவர்கள் சிகிச்சை பெறுவதற்காக 02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரைத் தாக்கியவர்களை பொலிஸார் ஒரு மாதமாகத் தேடுகின்றார்கள்

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீது தாக்குதல் நடத்துவதற்கு வருகை தந்ததாக கூறப்படும் சந் தேகநபர் போலியான வாகன தகடு இலக்கத்தையே பயன்படுத்தியுள்ளார்.

அத்துடன் அவரது தொலைபே சிக்கு உள்வந்த அழைப்புகள் மற் றும் வெளிச்சென்ற அழைப்புகள் தொடர்பிலான விபரங்கள் தொலை பேசி நிறுவனங்களிடமிருந்து கிடைக் கவில்லை என்று பொலிஸார் நீதி மன்றத்தில் நேற்று தெரிவித்தனர்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீதான தாக்குதல் தொடர்பிலான வழக்கு கல்கிசை பிரதான நீத வான் ரொசான் நிரோச பெர்னண்டோ முன்னிலையில் நடைபெற்றது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதிச் சேவை ஆணைக்குழுவின் செய லாளர் மஞ்சுள திலகரட்ன மீது கல்கிசை பகுதியில் வைத்து ஒக்டோபர் 08ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டது.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீது தாக்குதல் நடத்தியோர் இன்னும் கைது செய்யப்படவில்லை. எனி னும் தாக்குதல் நடத்துவதற்கு சந்தேகநபர் வருகைதந்ததாக கூறப்படும் வகையை சேர்ந்த 450 வாகனங்கள் பரிசோதனைக்கு உட் படுத்தப்பட்டுள்ளன. விசாரணையை துரிதப்படுத்தி குற்றவாளிகளை கைது செய்யு மாறு உத்தரவிட்ட நீதவான் வழக்கு விசாரணையை டிசெம்பர் மாதம் 13ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## கராப்பிட்டிய மருத்துவபீட மாணவர்கள் மோதல் ஐவர் படுகாயம்

காலி, கராப்பிட்டிய மருத்துவ பீட மாணவர் குழுக்கள் இரண் டுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஐந்துபேர் படுகாயமடைந்துள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்களுக்கிடையி லேயே மோதல் ஏற்பட்டுள்ளது.

இம்மோதலுக்கான காரணம் யாதென இதுவரை தெரிய வில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பிரிட்டிஷ் அறிக்கை குறித்து இலங்கை கருத்து வெளிடாது

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியாகும் வரை பிரிட்டனில் சார்ள்ஸ் பெற்றி தயாரித்த அறிக்கை குறித்து எந்தக் கருத்துக்களை யும் வெளியிட முடியாது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சார்ள்ஸ் பெற்றி தயாரித்த அறிக்கையில் இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது ஐக் கிய நாடுகளின் செயற்பாடுகள் தொடர்பான உள்ளக அறிக்கை நேற்று பான் கீ மூனிடம் கைய ளிக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டிருந்தது.

எனினும் அதற்கு முன்னதா கவே இந்த அறிக்கை ஊடகங்க ளுக்கு வெளியாகி இருந்தது.

இதில் இறுதி யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகள் சபை பொது மக்களை பாதுகாக்க தவறிவிட்ட தாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஐ.நா. தவறிழைத்து விட்டதாம்

“இலங்கையில் பணியிலிருந்த ஐ.நா. அதிகாரிகள் அங்குள்ள தமி ழர்களை காக்கும் கடமையிலி ருந்து தவறி விட்டனர் 2008ஆம் ஆண்டில் போர் உச்சகட்டத்திலி ருந்த போது, வட மாகாணத்திலி ருந்து வெளியேற வேண்டாம் என தமிழர்கள் மன்றாடிய போதும், ஐ.நா. அதிகாரிகள் தங்களது உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் எண்ணத்துடன் அங்கிருந்து வெளி யேறிவிட்டனர்.

அவர்கள் அங்கேயே இருந்தி ருந்தால் இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை உலகிற்குத் தெரிவித்து, அவற்றைத் தடுக்க ஐ.நா. தவறிவிட்டது” என்று ஐ.நா.வின் முன்னாள் அதிகாரி சார்லஸ் பெட்ரி தலைமையிலான விசாரணைக் குழு அதன் அறிக் கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

உலகில் அமைதியை நிலை நிறுத்தி, மக்களுக்கு பாதுகாப்பு அளித்தல், மனித உரிமை களையும், மனித உயிர்களையும் பாதுகாத்தல், சமூக பொருளாதார மேம்பாட்டுக்கு பாடுபடுதல் ஆகி யவை தான் ஐ.நா. அமைப்பு உரு வாக்கப்பட்டதன் நோக்கம் ஆகும்.

ஆனால், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தக் கடமைக ளில் ஒன்றைக் கூட ஐ.நா. செய் யவில்லை.

மொத்தத்தில் உல கின் மன சாட்சியாக செயல்பட வேண்டிய ஐ.நா., இலங்கை மற்றும் அதற்கு ஆதரவாக செயல் பட்ட வல்ல ரசுகளின் கைப்பாவையாக செயல்பட்டிருக்கிறது என்பது இந்த அறிக்கையின் மூலம் உறு தியாகியிருக்கிறது என்றும் அறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

## வடமாகாண அபிவிருத்தி...(தொடர்)

உள்ளடக்கியதாக ஏழு பிரிவுகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். கண்காட்சியில் வடமாகாணத்திலுள்ள 34 உள்ளூராட்சிச் சபைகளும் பங்கு கொள்கின்றன. சிறந்த காட்சிப்படுத்தலுக்கு விருது கள் வழங்கப்படவுள்ளன.

## வயிறோட்டத்தினால்...(தொடர்)

பிபில வைத்தியசாலைக்கு வந்திருந்தனர் அவர்கள் வயிற்றோட்டத் தினால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிபில நகரத்திற்கு நீர் விநியோகிப்பதற்கான நீர்த் தாங்கியிலிருந்து விநியோகித்த நீரை பருகியதை அடுத்தே வயிற்றோட்டம் பரவியி ருப்பதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

## இலங்கையில்...(தொடர்)

வைப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றன. இதனால், இங்கு உள்ள மக்களிடம் அமைதி இல்லாத நிலையே காணப்படுகிறது.

இலங்கையில் மனிதஉரிமைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படும் வரை கொமன்வெல்த் உச்சிமாநாட்டில் பங்கேற்பதை வெளிப்படையாக நிராகரிக்க வேண்டும் என்று பிரித்தானியப் பிரதமர- ிடம் வெளிவிவகாரக் குழு அவ்வறிக்கையினூடாக கோரிக்கை விடுத் துள்ளது.

## இலங்கை அகதிகளுக்காக...(தொடர்)

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியப் பலன்களை இலங்கை தமிழர்களுக்கு வழங்குதல் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளை முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அரசு வழங்கி வருகிறது.

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் முகாம்களில் வாழும் தமிழர் களின் நலனுக்காக, அந்த முகாம்களில் வசிக்கும் மக்களின் குடிநீர் வசதியினை மேம்படுத்துதல், வீடுகளை பழுதுப்பார்த்தல், சாலைகள் சீரமைத்தல், நூலகக் கட்டடம் கட்டுதல், நியாய விலைக்கடை அமைத் தல், கூடுதல் கழிப்பறை மற்றும் குளியலறை ஏற்படுத்துதல், சமுதாய கூடங்கள் அமைத்தல், மின்கம்பங்கள் மற்றும் தெருவிளக்குடன் அமைத்தல், சமையலறை கட்டுதல் போன்ற அடிப்படை வசதிகளை செய்துக் கொடுப்பதற்காக 25 கோடி இந்திய ரூபா நிதி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

தற்போது, அகதிகள் முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர் களின் நலனுக்காக, கோயம்புத்தூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், மதுரை, புதுக்கோட்டை, சேலம், சிவ கங்கை, திருவள்ளூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய 14 மாவட்டங்களில் உள்ள 21 அகதிகள் முகாம் களில் ஒரு வீட்டிற்கு 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நீடித்து நிலைக் கக்கூடிய 2500 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கும், அதற்காக 25 கோடி இந்திய ரூபா நிதி ஒதுக்கீடு செய்தும் முதலமைச்சர் ஜெய லலிதா உத்தரவிட்டுள்ளார்.

அரசின் இந்த நடவடிக்கைகள் அகதிகள் முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வழி வகுக்கும் என்று அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## தெரிவுக்கமிட்டியில்...(தொடர்)

கூட்டாக இணைந்து மாற்று அறிக்கை ஒன்றினை வெளியிடும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட எம்.பி. யுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார். பிரதம நீதியரசரை பழிவாங்குவதே அரசாங்கத்தின் நோக்கம். எனவே தமிழ்க் கூட்டமைப்பு ஐ.தே.கட்சி, ஜே.வி.பி என்பன இணைந்து மாறுபட்ட அறிக்கை ஒன்றினை வெளியிடும் என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

## கம்பளைப் பாடசாலை...(தொடர்)

பாடசாலைக்கு சமூகமளித்தவேளை பிரதான வகுப்பறைக் கட்டிடத்தில் ஒரு வகை விசக்கிருமி கள் பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் உடல் அரிப்பு, தலைசுற்றல் மற்றும் மயக்கத்திற்குள்ளாகிய நிலையில் 1026 மாணவிகள் உட்பட இரு ஆசிரியைகள் உடனடியாக கம்பளை போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத் துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதில் 126 மாணவிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன் ஏனையவர்கள் இன்று நண்பகல் வரை ஆரம்ப கட்ட சிகிச்சையைத் தொடர்ந்து வீடு திரும்ப அனு மதிக்கப்பட்டுள்ளதாக கம்பளை போதனா வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் சரத் வீரபண் டார தெரிவித்தார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து பெற்றோர் மற்றும் பொதுமக்கள் பாடசாலை மற்றும் வைத்தியசாலை பகுதியில் குழுமியதால் இப்பகுதியில் பெரும் பதற் றம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கம்பளை பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

கம்பளை நகர சபையின் சுகாதாரப் பிரிவினர் பாடசாலையை சூழவுள்ள பகுதியில் விசக்கிருமிகள் பரவியதாகத் தெரிவிக்கப்படும் இடங்களில் புகை அடித்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இப்பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாடசாலை வகுப்பறைக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் இருந்த தரம் 10 மற்றும் 12 மாணவிகள் முதலில் கிருமிகளின் தாக்கத்திற்குள்ளாகியுள்ள தாகவும் தெரியவருகின்றது.

மாணவிகளின் உடலில் ஒவ்வாமை நிலை ஏற்பட் டமைக்கான காரணத்தை இதுவரை உறுதிப்படுத்த முடியாத நிலையில் தொடர்ந்தும் பரிசோதனை களை மேற்கொண்டு வருவதாக கம்பளை நகரசபை சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.மேலும் கம்பளை வலய கல்விப்பணிமனை அதி காரிகள் சம்பவத்தை தொடர்ந்து பாடசாலைக்கு விஜயம் செய்ததுடன் பாடசாலையை இன்று முதல் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மூடவும் உத்தரவிட்டுள்ளனர்.

## சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா...(தொடர்)

அறிவித்துள்ளது.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குப் படகு கள் மூலம் வருபவர்கள் குறித்த அவுஸ்தி ரேலியாவின் புதிய அறிவிப்பு குறித்து விளக்க மளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றபோது அவுஸ்திரேலிய குடிவரவு மற்றும் குடியுரிமை அமைச்சரின் விசேட அறிவிப்பும் வெளியிடப்பட்டது. இங்கு கருத்துத் தெரிவித்த அவுஸ்திரேலிய குடிவ ரவு விவகார ஆசிய பிராந்திய பணிப்பாளர் ஜோஸ் அல்வ ரோஸ் கூறியதாவது, சட்ட விரோதமாக வரு வோரை நாட்டிற்கு வெளியில்வைத்து பரிசீலனை செய்யும் நடைமுறையை அவுஸ்திரேலியா மீண்டும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

அவுஸ்திரேலியா கடல் எல்லைக்கு வள்ளங்கள் மூலம் வருபவர்கள் நவ்ரு அல்லது மானுஸ் தீவுக ளுக்கு அனுப்பப்படுவர். இங்கு நீண்ட காலம் இருக்க நேரிடும். புகலிடம் வழங்குவதற்கான உண்மையான காரணம் இல்லாதவர்களை அவுஸ்திரேலியா ஏற்றுக கொள்ளாது. இதில் அவுஸ்திரேலிய அரசாங்கம் உறுதியாக உள்ளது.

ஆட்கடத்தல் காரர்களின் பொய் வாக்குறுதிக ளையும் உறுதிமொழிகளையும் நம்பி அநேகர் வள் ளங்கள் மூலம் உயி ராபத்தான கடற்பயணம் மேற் கொள்கின்றனர். இத்தகைய ஆபத்தான கடற்பய ணத்தை நிறுத்துவதில் அவுஸ்திரேலிய அரசாங்கம் உறுதியாக உள்ளது. இவ்வாறு வருபவர்கள் எந்த நன்மையும் அடையப் போவதில்லை. பணத்தை விர யம் செய்து இந்த உயிராபத்தான பயணத்தை மேற்கொண்டு வருபவர் களுக்கு புகலிடமோ, விசாவோ கிடைக்கப் போவ தில்லை.

இவ்வாறு சட்ட விரோதமாக புகலிடம் கோரி வருபவர்கள் குறித்து எதுவித விசேட கவனமும் செலுத்தப்படாது. புகலிடக் கோரிக்கையை ஏற்ப தற்கான உண்மையான காரணமில்லாத எவருக்கும் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முடியாது. அவர் கள் உடனடியாக தமது நாட்டிற்கு திருப்பி அனுப் பப்படுவர்.

இதன்படி 257 இலங்கையர்கள் தமது நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களில் 87 பேர் சுயமாக விரும்பி நாடு திரும்பினார்கள். இவர்க ளுக்கு விசேட கொடுப்பனவொன்று வழங்கப்பட்டது. ஏனையவர்களை அவுஸ்திரேலிய அரசு திருப்பி அனுப்பியது.

அவுஸ்திரேலியாவிற்கு வருபவர்களுக்கு சிறந்த வசதிகளும் தொழில்வாய்ப்பும் கிடைப்பதாக தவறான வதந்தி பரப்பப்பட்டுள்ளது.

இங்கு சட்டவிரோதமாக வருபவர்களுக்காக விஸா எதுவும் தயாராக வைக் கப்படவில்லை. அவ்வாறு வருபவர்களுக்கு விரை வாக பதிலோ முடிவோ வழங்கப்படாது எதுவித விசேட சலுகையும் கிடைக் காது.

உரிய விஸா இன்றி எவருக்கும் அவுஸ்திரே லியாவில் தங்க சட்ட அனுமதி கிடையாது. இங்கு சட்டவிரோதமாக வருபவர்கள் குறித்து தனித்தனி யாக விசாரிக்கப்படுகிறது.

சிறந்த பொருளாதார வசதி நல்ல தொழில் என்ப வற்றை எதிர்பார்த்தே அநேகர் சட்ட விரோதமாக இங்கு வருகின்றனர்.

சட்ட விரோதமாக வந்துள் ளவர்கள் தாமாக விரும்பி தமது நாட்டிற்குச் செல்ல முன்வந்தால் சர்வதேச இடம்பெயர் அமைப் பினூடாக திருப்பி அனுப்ப தேவையான உதவிகள் வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளது.

# தப்பியோடிய கைதிகள் தொடர்பில் வெளியாகும் முரண்பட்ட தகவல்கள்

வெலிக்கடை சிறைச்சாலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலவரத்தின்போது தப்பியோடிய சிறைக்கைதிகளின் எண்ணிக்கை பற்றி முரண்பாடான செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த எண்ணிக்கை 20இலும் அதிகமாக இருக்குமென சிலர் கூறுகின்றனர்.

பொரளை மற்றும் தெமட்டகொட பகுதியில் நடந்த தேடுதலின் போது 9பேர் படிபட்டதாக அல்லது சரணடைந்ததாக கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, கலவரம் தொடங்கிய எல் மண்டபத்தில் கடமையிலிருந்த இரண்டு சிறைக் காவலர்கள், வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

தப்பியோடியவர்களின் தொகை மூன்று தொடக்கம் ஐந்து வரையானது என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூவரணியொன்று இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

வெலிக்கடை சிறைத் தொகுதியினுள் சட்டம், ஒழுங்கு என்பவற்றை நிலைநாட்டுவதற்காக பெருமளவிலான விசேட அதிரடிப்படையும் இராணுவமும் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிணை வழங்க கோரி ஆர்ப்பாட்டம்

சட்டவிரோதமான அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முற்பட்ட போது கைது செய்யப்பட்டு பிணை வழங்கப்படாமல் பல மாத காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள உறவினர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

நீர்கொழும்பு பிரதான வீதியல் அமைந்துள்ள சென் மேரிஸ் தேவாலயத்திற்கு முன்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. பிணை வழங்கப்படாமல் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது மகஜர் ஒன்றிலும் கையெழுத்திட்டனர். இந்த மகஜர் கடந்த செவ்வாய்க்கிழமை கர்தினால் வண. மெல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# சிறைச்சாலைகளை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவருவது சரியான செயலல்ல

- கரு ஜெயசூரிய எம்.பி.

"சிறைச்சாலைகள் அனைத்தும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்த கருத்து என்னை ஆச்சரியப்பட வைத்தது" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் ஆணையாளரின் இக்கருத்தானது பிறிதொருவரின் தூண்டுதலின் பேரில் தெரிவிக்கப்பட்டதா அல்லது சுயமாக அவர் தெரிவித்ததா? என்பதை அறியவிரும்புவதாகவும் கரு ஜயசூரிய தெரிவித்தார்.


இவ்விடயம் தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

"ஜனநாயக நாடொன்றின் சிறைச்சாலைகள் ஒருபோதும் பாதுகாப்பு நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படுவதில்லை.

இவ்வாறான நிகழ்வுகள் சர்வாதிகார ஆட்சியிலேயே இடம்பெறுவதுண்டு. ஜனநாயக நாட்டின் கைதிகள் மனிதாபமுடையவர்களாகவே கருதப்படுகிறார்கள். பொதுவாக இவ்வாறான கைதி-களை புனர்வாழ்வளித்து சமூகத்துடன் இணைந்து வாழச் செய்வதே ஜனநாயக நாட்டு சிறைச்சாலைகளின் கடமை.

சிறைச்சாலைகளும் பொலிஸ் சேவையும் இன்று தேவையற்ற அரசியல் தலையீடுகளால் சீரழிந்து வருகிறது. மோசமான குற்றவாளிகள் சிலர் - அரசியல்வாதிகளின் நம்பிக்கைக்குரியவர்களாக மாறியிருப்பதும் இத்தகைய சீர்கேட்டிற்கு காரணம் எனலாம்.

தற்போதைய சிறைச்சாலை ஆணையாளரின் நாடகங்களை நாங்கள் தெளிவாக அறிந்து வைத்திருக்கிறோம். முன்னாள் இராணுவ தளபதி சிறையில்



இருந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கூட பார்க்கவிடாமல் செய்து சிறைச்சாலை சட்டங்களை மீறியிருந்தார். இது போன்ற சட்ட மீறல்கள் முன்னொரு போதும் நடந்ததில்லை.

அதுமட்டுமல்லாமல், கடந்த வெள்ளிக்கிழமை வெலிக்கடை சிறைச்சாலையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்திற்கு முழுப் பொறுப்பினையும் சிறைச்சாலைகள் ஆணையாளரே ஏற்க வேண்டும்.

இதுபோன்ற சம்பவங்கள் வெலிக்கடையில் மட்டும் நடைபெறவில்லை. இலங்கையின் அனைத்து பாகங்களிலும் நடைபெற்று வருவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இது நிர்வாக சீர்கேட்டினை எடுத்துக் காட்டுகிறது" என்று கரு ஜயசூரிய குறிப்பிட்டார்.

அதுமட்டுமல்லாமல் சிறைச்சாலை தாக்குதல் சம்பவம் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொண்டு கடமை தவறிய அதிகாரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் எனவும் கரு ஜயசூரிய மேலும் தெரிவித்தார்.

# தெரிவுக்குழுவுக்கு யாப்பா தலைமை



பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கான தலைமைப் பொறுப்பு அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

11 பேரடங்கிய நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கே அமைச்சர் யாப்பா தலைமைதாங்கவுள்ளார்.

இதேவேளை, பிரத நீதியரசர் மீதான குற்றப் பிரேரணை நாட்டில் பல்வேறு அரசியல் கருத்து முரண்பாடுகள் உட்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# டிசெ. 4இல் அதிபர்- ஆசிரியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம்

டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி ஆசிரியர் - அதிபர் ஒன்றிணைந்து மாபெரும் பணிநிறுத்தப் போராட்டமொன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் தெரிவித்தது.

நீண்டகாலமாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்ற போதிலும் இதுவரையில் தீர்வுகள் எவையும் எட்டப்படாத நிலையிலேயே இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் அச்சங்கம் குறிப்பிட்டது.

இது தொடர்பில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு தேசிய நூலகத்தில் இடம்பெற்ற 11 தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் போதே தீர்மானிக்கப்பட்டதாக சங்கம் கூறியது.

கல்வி அமைச்சர் இதுவரையில் அதிபர் - ஆசிரியர் சங்கங்களுடன் கலந்துரையாடாத நிலையில், தொழிற்சங்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார் என்பதையும் இம்முறை வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அதிபர் - ஆசிரியர்களுக்கு எவ்வித சலுகைகளும் வழங்கப்படவில்லை என்பதையும் கருத்திற்கொண்டே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலா-ளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம், தேசிய கல்விச் சேவைச் சங்கம், ஆசிரிய சேவையாளர்களின் பொதுச் சங்கம், சுயாதீன கல்விச் சேவைச் சங்கம், ஐக்கிய தமிழ் ஆசிரியர் சங்கம், அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம், இலங்கை தேசிய அதிபர் சங்கம், தரம் 1 அதிபர் சங்கம், தரம்பெற்ற அதிபர் சேவைச் சங்கம் மற்றும் அகில இலங்கை அதிபர் சங்கம் உட்பட 11 சங்கங்கள் இந்த சம்மேளனத்தில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தற்கொலைக்கு முயன்ற சாலியவுக்கு எதிராக மனைவி முறைப்பாடு

தற்கொலைக்கு முயற்சித்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு காப்பாற்றப்பட்ட மத்திய மாகாணசபைத் தலைவர் சாலிய பண்டார திஸாநாயக்காவுக்கு எதிராக அவரது மனைவி, கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார். இதேவேளை, அவரது தற் கொலை முயற்சி தொடர்பில் விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எச்.என்.பீ. அம்பன்வல தெரிவித்தார்.

# இலங்கையில் ஐ.நா.வின் நடவடிக்கை: இவ்வாரம் அறிக்கை

இறுதி யுத்த காலகட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவின் அறிக்கை இவ்வாரம் கிடைக்கப்பெறும் என ஐநா செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஐநா செயலாளர் நாயகம் பான்கி மூனின் பேச்சாளர் மார்டின் நெசிர்கி தொடர்ந்து கூறுகையில்,

குறித்த அறிக்கை செயலாளர் நாயகத்திடம் கிடைக்கப் பெற்றதும் அதனை முழுமையாக வாசித்து பொதுமைப்படுத்த நடவடிக்கை எடுப்போம் என்றார்.

இலங்கையில் பிரச்சினை உள்ள காலத்தில் ஐநாவின் சொந்த நடவடிக்கைகளை ஆய்வு செய்ய ஐ.நா. செயலாளரின் பரிந்துரையின் பேரில் ஓர் உள்ளக ஆய்வு குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய இராசி பலன் (15.11.2012)

**நந்தன வருடம் ஐப்பசித் திங்கள் 30ஆம் நாள் வியாழக்கிழமை**

**நட்சத்திரம்** : அனுஷம் பி.ப. 12.26 வரை அதன் பின் கேட்டை
**திதி** : துதியை இரவு 11.58 வரை. அதன் பின் திருதியை
**சுபநேரம்** : 7.37 - 9.07 **இராகுகாலம்** : 1.37 - 3.07
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : பணவரவு தாமதம், குடும்ப மகிழ்ச்சி, வியாபார மந்தம்.
**இடபம்** : நல்ல சில்ல சிந்தனை, நண்பர்கள் உதவி, மேலதிக வருமானம்.
**மிதுனம்** : எண்ணங்கள் மாறும், சந்தர்ப்ப பயன்பாடு, பெரியோர் அறிவுரை.
**கடகம்** : தர்மசிந்தனை, ஆதாயம், தொழில் தாமதம்.
**சிங்கம்** : கடின உழைப்பு, அயலவர் சஞ்சலம், தொழில் பொறுப்பு.
**கன்னி** : தொழில் விருத்தி, செயற்திறமை, உற்சாகம்.
**துலாம்** : நினைத்ததை நிறைவேறும், நம்பிக்கை, பணியாளர் ஒத்துழைப்பு.
**விருச்சிகம்** : சுயநலப் போக்கு, குறைகேட்தல், கபால ரோகம்.
**தனுசு** : தொழில் முன்னேற்றம், நண்பர்கள் ஆதரவு, எதிர்பாராத வரவு.
**மகரம்** : வாக்கு சாதுரியம், தொழில் உயர்வு, பிறரால் மதிப்பு.
**கும்பம்** : பணப் புழக்கம், மனமகிழ்ச்சி, நிதான செயல்.
**மீனம்** : தொழில் இடையூறு, எதிரிகள் தொல்லை, முயற்சியின் மேல் பலன்.

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# பஹ்ரெய்னில் கொடுமைக்குள்ளாக்கப்பட்ட 25 வயது தமிழ்ப் பெண் 18 மாதங்களின் பின் மீட்பு

பஹ்ரெய்னில் பணிப் பெண்ணாகக் கடமையாற்றச் சென்ற வேலு சுந்தரம் மஞ்சுளா என்ற தமிழ்ப் பெண் சுமார் பதினெட்டு மாதங்களாக எஜமானியின் வீட்டில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் மீட்கப்பட்டார் என்று "பஹ்ரென் டெய்லி நியூஸ்" தெரிவித்தது. பஹ்ரெய்ன் குடும்பம் ஒன்றில் பணிப்பெண்ணாகக் கடமையாற்றுவதற்கு 2009ஆம் ஆண்டு மஞ்சுளா பஹ்ரெய்ன் நாட்டுக்குச் சென்றார். மாதாந்தம் 85 பஹ்ரெய்ன் டினார் சம்பளம் வழங்கப்படுமென்று அவருக்கு உறுதியளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அவருக்கு மாதாந்தம் 60 பஹ்ரெய்ன் டினாரே வழங்கப்பட்டு வந்தது.தினசரி 22 மணித்தியாலயங்கள் வேலை செய்ய அவர் நிர்பந்திக்கப்பட்டார். இரண்டு வீடுகளில் அவர் வேலை செய்ய வேண்டியிருந்தது. 25 வயதான மஞ்சுளா தனக்கு நேர்ந்த துயரங்கள் குறித்து பஹ்ரெய்ன் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தார். ஆனால் பயனேதும் கிடைக்கவில்லை.

ஒரு வருடத்திற்குப் பின்னர் மீண்டும் அவர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தார். மஞ்சுளா துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படவில்லை என்பதால் பொலிஸார் தொழில் அமைச்சுக்கு அனுப்பி வைத்தனர். மஞ்சுளாவுக்கு பொதுவான தங்கும் இடம் ஒன்று வசிப்பதற்கு செய்து கொடுக்கப்பட்டது.

எம்.டபிள்யூ.ரி.எஸ் என்ற தொண்டு நிறுவனமே மஞ்சுளாவிற்கு தஞ்சம் கொடுத்தது. தனது வீட்டு எஜமான் வலுக் கட்டாயமாகத் தன்னை தடுத்து வைத்தார் என்று மஞ்சுளா பொலிஸில் முறைப்பாடு செய்தார். அவருக்கு ஏழு வயது மகன் இலங்கையில் இருக்கிறார். சம்பளப் பணத்தை பெற முடியாமல் இருப்பதால் வெறும் கையோடு அவர் நாடு திரும்பவேண்டியிருக்கிறது.

அவர் நாடு திரும்பு வதற்கான விமான டிக்கட்டையும் குறிப்பிட்ட தொண்டு நிறுவனமே பணம் செலுத்திப் பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளது. இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திலேயேதான் பஹ்ரெய்னுக்கு பணிப்பெண்ணாக செல்லும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார் என்றும் மஞ்சுளா கூறுகிறார்.

மாதாந்தம் 85 டினார்கள் சம்பளம் வழங்கப்படுமென்று ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது ஆனால் தனக்கு 60 டினார்களே சம்பளமாக தரப்பட்டதென்றும் அவர் சொன்னார் தாயின் வீட்டிலும் அவரது மகளின் வீட்டிலும் நாளொன்றுக்கு 22 மணித்தியாலயங்கள் வேலை செய்யதான் நிர்ப்பந்திக்கப்பட்டாரென்றும் மஞ்சுளா தெரிவித்தார்.

# புதுடில்லியில் தாக்குதல் நடத்த இந்திய முஜாகிதீன் கெரில்லாக்கள் ஊடுருவல்

புதுடில்லியில் தாக்குதல் நடத்துவதற்காக இந்தியன் முஜாகிதீன் தீவிரவாதிகள் மூன்று பேர் நுழைந்துள்ளதாக உளவு அமைப்புகள் எச்சரித்துள்ளதால் அங்கு பாதுகாப்பு தீவிரப்படுத்தபட்டுள்ளது. டெல்லி போலீசுக்கு கடந்த முதலாம் தேதி சவுதி அரேபியாவில் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் பேசியவர், டெல்லியில் தீவிரவாத தாக்குதல் நடத்த சிலர் திட்டமிட்டு இருப்பதாக கூறினார். இது குறித்து உளவு அமைப்பான ரோவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்னர் ரோ உறுப்பினர்களுடன், டெல்லி போலீசார் சவுதி அரேபியா தலைநகர் ரியாத்துக்கு சென்று போன் செய்தநபரிடம் விசாரணை நடத்தினர். அப்போது தீவிரவாதத் தாக்குதல் திட்டம் குறித்து கூடுதல் தகவல்கள் கிடைத்தன.

இந்தியன் முஜாகிதீன் தீவிரவாதிகள், டெல்லியில் பயங்கர தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பது தெரியவந்தது. டெல்லி மெட்ரோ மற்றும் சர்வதேச வர்த்தக கண்காட்சி நடக்கும் பிரகதி மைதானம் ஆகிய இடங்களில் நவம்பர் 14ம் தேதி தாக்குதல் நடத்தக் கூடும் எனவும், நாசவேலையை அரங்கேற்ற இந்தியன் முஜாகிதீன் தீவிரவாதிகள் 3 பேர் தலைநகருக்குள் நுழைந்திருப்பதாகவும் தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து டெல்லியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தீவிரவாதிகளின் திட்டத்தை முறியடிக்க, மெட்டல் டிடெக்டர் மற்றும் கண்காணிப்பு கேமரா மூலம் பொலீசார் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். கடந்த 2008ம் ஆண்டு டெல்லி, ஐதராபாத் மற்றும் ஜெய்ப்பூரில் தொடர் குண்டு வெடிப்புகள் நடந்தன. இதற்கு மூளையாக செயல்பட்டவன் இந்தியன் முஜாகிதீன் தலைவன் ரியாஸ் பட்கல். இந்தியாவால் தேடப்பட்டு வரும் தீவிரவாதிகள் பட்டியலில் உள்ளான். டெல்லியில் ஊடுருவி இருக்கும் தீவிரவாதிகளில், ரியாஸ் பட்கலும் இருக்கலாம் என சந்தேகிக்கப்படு கிறது.

## பன்னிரெண்டு சிறைக்காவலர்கள் மீது விசாரணை

கடந்த வெள்ளிக்கிழமை வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம் பெற்ற கலகத்தைத் தூண்டிவிட்ட கைதிகளோடு சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் பன்னிரெண்டு சிறைக் காவலர்களை பொலிஸார் விசாரணை செய்யவிருக்கின்றனர்.

சிறைச்சாலை மோதலில் பலியான கைதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட கைத்தொலை பேசியிலிருந்து சிறைக்காவலர்களுடன் கைதிகள் உரையாடி யிருப்பது தெரியவந்த தெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சில அரசியல்வாதிகளுடனும் கைதிகள் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்ட விபரங்களும் அம்பலத்துக்கு வந்துள்ளன என்றும் பொலிசார் கூறினர்.

# சீனாவில் அதிகார மாற்றங்கள்

சீனாவில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் 18வது மாநாடு இப்போது நடைபெற்று வருகிறது. இந்த மாநாடு நேற்று (நவம்பர் 14) நிறைவடைந்தது. அப்போது ஆட்சியிலும் இராணுவத்திலும் தலைமை மாற்றங்கள் நிகழ்ந்து ள்ளன.

நாட்டின் அதிபராக இருக்கும் ஹூ ஜிண்டாவோ தனது பதவியை விட்டு விலக உள்ளார். மேலும், ராணுத் தலைவர் பதவியையும் அவர் ராஜிநாமா செய்வார் என்று ஹாங்காங்கில் இருந்து வெளிவரும் "சவுத் சைனா மார்னிங் போஸ்ட்" நாளிதழ், அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

அவர் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் உள்ளிட்ட அனைத்துப் பதவிகளிலும் இருந்து ஓய்வு பெறுவது பலரையும் வியப்படைய வைத்துள்ளது. ஏனெனில் ஜிண்டாவோ அதிபர் பதவியைத் துறந்தாலும் ராணுவத் தலைவர் பதவியை தன் வசமே வைத்திருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. சமீபத்தில் ராணுவத்தில் செய்யப்பட்ட மாற்றத்திலும் அவருக்கு நெருக்கமான அதிகாரிகளே முக்கியப் பதவிகளில் நியமிக்கப்பட்டனர்.

ஹூ ஜிண்டாவின் விலகலைத் தொடர்ந்து சீனாவின் புதிய அதிபராக இப்போதைய துணை அதிபர் ஜீ ஜின்பிங்(59) புதன் கிழமை அதிகாரப்பூர்வமாத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## முன்பள்ளிக் கட்டிடம் புனரமைப்பு

(உடுவில்)

நல்லூர் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் உதவியுடன் அரியாலை பூம்புகார் சதானந்தா முன்பள்ளிக் கட்டிடம் புனரமைக்கப்பட்டுள்ளது. புனரமைக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டிடத்தில் வகுப்புகள் இயங்கத் தொடங்கியுள்ளன. பூம்புகார் கிராம மக்களின் கோரிக்கையினை அடுத்து இம்முன்பள்ளி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

## வறிய மாணவர்களுக்கு கொடுப்பனவு

(உடுவில்)

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் வறிய மாணவர்களுக்கு கரவெட்டி சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் கொடுப்பனவுகளை வழங்கவுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்து தற்போது உயர்தரம் கற்றுவரும் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சி கருதி கொடுப்பனவு வழங்கப்படவுள்ளன. இத் திட்டத்திற்குரிய மாணவர்கள் தெரிவு இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் தையல் பயிற்சி

(உடுவில்)

யாழ்ப்பாண சமூக அபிவிருத்தி மன்றம் நடாத்தும் தையல் பயிற்சிக்குப் பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள். எதிர் வரும் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள தையல் பயிற்சி வகுப்புக்குச் சேர விரும்பும் யுவதிகள் எதிர்வரும் 30ம் திகதிக்கு முன் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண சமூக அபிவிருத்தி மன்றம், பருத்தித்துறை வீதி, நல்லூர் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகின்றது.

## யோகாசனப் பயிற்சிகள்

(உடுவில்)

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள இந்து பாடசாலைகளில் மனவளக்கலை சம்பந்தமான யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றுள்ளன. இவ்யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் மாதகல் சென்யோசப் மகாவித்தியாலயம், பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை, பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மற்றும் வட்டு இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடை-பெற்றுள்ளன.



புளியங்குளம், சின்னப்பூவரசங்குளம் விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலையின் திறப்பு விழா வாணி விழா அன்று இடம்பெற்றது (24.10.2012) நிகழ்வில் பாடசாலை அதிபர் திருமதி. சா. சுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றுவதையும், வவுனியா வடக்கு வலய முன் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. இராஜேஸ்வரன் அவர்கள் சிலைக்கு மாலை சூட்டுவதையும், விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ். மகேஸ்வரன் அவர்கள் மாலை சூட்டுவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கை யுத்தத்தில் ஐ.நா.வின் செயற்பாடுகளில் திருப்தி இல்லை

## பணியாளர்களின் தகுதிகள், அனுபவ குறைபாடுகள் காரணம் என்கிறது உள்ளக விசாரணை அறிக்கை

இலங்கையில் மூன்றரை ஆண்டுக்கு முன் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பொதுமக்களை அழிவிலிருந்து பாதுகாக்க ஐநா சபை மோசமாகத் தவறியுள்ளது என்று ஐநாவுக்குள் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கை ஒன்று கூறுகிறது.

ஐநாவுக்குள் உள்ளளவில் நடத்தப்பட்ட ஆய்வுடைய அறிக்கையின் வரைவு பிரதி ஒன்று பிபிசியிடம் கசியவிடப்பட்டுள்ளது. தாங்கள் பாதுகாக்க வேண்டிய மக்களை ஐநா கைவிட்டிருந்தது என்று இந்த அறிக்கை முடிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஐநா ஆற்றிவந்த பணியின் நோக்கம் யுத்தத்தை தடுப்பது என்பதல்ல, மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைக்கச்செய்வதுதான் அவர்களுடைய வேலை.

ஆனால் இலங்கைத் தலைநகர் கொழும்பில் பணியாற்றிய ஐநா பணியாளர்களுக்கு அவ்வாறான உதவிகளை செய்வதற்கான தகுதிகளோ, அனுபவமோ இல்லை என்பதை இந்த ஆய்வு அறிக்கை விவரிக்கிறது.

இலங்கையின் கொடூரமான யுத்தத்தால் எழுந்த சவால்களை இவர்களால் சமாளிக்க முடியவில்லை என்றும், நியூயோர்க்கிலுள்ள ஐநா தலைமையகத்திலிருந்து இவர்களுக்கு ஒழுங்கான உதவிகளும் கிடைக்கவில்லை என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.

கட்டமைப்பு ரீதியாகவே கூட பெரும் தவறுகள் நடந்துள்ளன என்றும், இப்படி ஒன்று எதிர்காலத்தில் நடக்கவே கூடாது என்றும் இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

செப்டெம்பர் 2008இல், ஐநா தனது பணியாளர்களை இலங்கையின் வடக்கிலுள்ள யுத்த பகுதிகளிலிருந்து விலக்கிக்கொண்டிருந்தது.

ஐ.நா. ஊழியர்களின் பாதுகாப்புக்கு தாங்கள் உத்திரவாதம் வழங்க முடியாது என்று இலங்கை அரசாங்கம் எச்சரித்ததை அடுத்து அது இம்முடிவை எடுத்திருந்தது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த எச்சரிக்கையை ஐநா எப்போதும் எதிர்த்துக் கேள்வி கேட்கவே இல்லை என்றும், ஐநா அந்த இடத்திலிருந்து விலகியதால் யுத்த பிரதேசத்தில் வாழ்ந்த மக்களுக்கு உதவிகள் கிடைப்பதிலும் அவர்களுடைய உயிர்கள் பாதுகாக்கப்படுவதிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டதென்று இந்த அறிக்கை கூறுகிறது.

யுத்தப் பிரதேசத்துக்குள் லட்சக்கணக்கான மக்களை விட்டுவிட்டு ஐ.நா. பணியாளர்கள் வெளியேறிய பின்னர், அரச படைகளும் விடுதலைப் புலிகள் தரப்பும் அம்மக்களை தமக்கு வேண்டிய விதத்தில் பயன்படுத்திக்கொண்டனர்.

விடுதலைப் புலிகளை அவர்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியும், கட்டாயப்படுத்தி சண்டையில் ஈடுபட வைத்தும் வந்தனர.

யுத்த காலத்தில் இலங்கையில் மிக மோசமான ஒரு பெருந்துயர சூழல் நிலவியதாக ஐநாவின் இந்த அறிக்கை கூறுகிறது. பொதுமக்கள் கொல்லப்படாமல் தடுப்பதற்கு முயல வேண்டும் என்பதை கொழும்பிலுள்ள மூத்த ஐ.நா. அதிகாரிகள் தங்களது பொறுப்பாகவே கருதியிருக்கவில்லை என்றும், நியூயோர்க்கிலுள்ள ஐநா தலைமையக அதிகாரிகளும் அவர்களுக்கு அறிவுறுத்தல்களையோ மாற்று உத்தரவுகளையோ வழங்கியிருக்கவில்லை என்றும் இந்த அறிக்கை விமர்சித்துள்ளது.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது என்பதை வலுவான உத்திகள் மூலம் தெளிவாக கணக்கிட்டுவருகிறது ஐ.நா. என்று அதுவே கூறினாலும், அந்த விவரங்களை ஐநா பிரசுரிக்கத் தவறியது என்பதையும் இந்த அறிக்கை விவரமாக எடுத்துரைக்கிறது.

ஐ.நா. கட்டமைப்புக்குள் ஒரு விடயத்துக்கு மாறாக இன்னொரு விடயத்தை விட்டுக்கொடுப்பது என்ற ஒரு கலாசாரம் அதிகம் என்று இந்த அறிக்கை கூறுகிறது. யுத்தப் பிரதேசத்தில் மக்களுக்கு சென்று உதவ கூடுதலான இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த மாதிரியான விடயங்கள் பற்றி வெளியில் பேசாமல் இருந்துவிட ஐநா பணியாளர்கள் தீர்மானித்திருந்தனர் என்று இது சுட்டிக்காட்டுகிறது.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக்கட்டம் அரங்கேறியபோது ஐ.நா. பாதுகாப்பு சபையோ, வேறு முக்கிய ஐ.நா. நிறுவனங்களோ ஒரு முறைகூட உத்தியோகபூர்வமாகக் கூடியிருக்கவில்லை.

ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கு எது தெரியவேண்டுமோ அதனை வெளியில் சொல்லாமல், அவர்கள் எதனைக் கேட்க விரும்புவார்களோ அதனைத்தான் ஐநா வெளியில் சொன்னது என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த அறிக்கையைப் பிரசுரித்து அதிலிருந்து படிப்பினைகளை கற்றுக்கொண்டு எதிர்காலத்தில் இப்படியான விடயம் நடக்காமல் பார்த்துக்கொள்ள ஐ.நா. முயல வேண்டும் என்று ஐநா தலைமைச் செயலர் விரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

## டொச் வங்கிக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்கு நாம் பொறுப்பல்ல

### - பெற்றோலிய கூட்டுத்தாபனம்

ஹெட்ஜிங் உடன்படிக்கை காரணமாக டொச் வங்கிக்கு ஏற்பட்ட நட்டங்களை ஈடுசெய்யும் முகமாக அந்த வங்கிக்கு 60 மில்லியன் டொலர்களை வழங்கவுள்ள செயற்பாட்டுக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சுசந்த சில்வா இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் எரிபொருளின் விலையை தளம்பளற்ற நிலையில் வைத்துக் கொள்வதற்காக வெளிநாட்டு வங்கிகளுடன் ஹெட்ஜிங் உடன்படிக்கை செய்யப்பட்டது.

எனினும தமக்கு நட்டம் ஏற்பட்டதாக கூறி டொச் வங்கி வழக்கை தாக்கல் செய்திருந்தது.

இதனை விசாரணை செய்த அமரிக்கா நீதியாளர் கடந்த மாத முற்பகுதியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 60 மில்லியன் டொலர்களை டொச் வங்கிக்கு செலுத்தவேண்டும் என்று உத்தரவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இதற்கு எதிராக மேன்முறையீடு செய்யப்போவதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## சுவாமி விவேகனந்தரின் 150 ஆவது ஆண்டு ஜனன விழா

(மருதனார்மடம்)

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு ஜனன விழாவும் மாநாடும் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

விழாக்குழுத் தலைவர் எஸ். சிவநடராஜா தலைமையில் நடைபெறும் விழாவில் 8.30 மணிக்கு ஏழாலை மகா வித்தியாலயத்தில் இந்து சமய எழுர்ச்சி ஊர்வலம் ஆரம்பமாகி சைவ சண்மார்க்க வித்தியாலத்தை சென்றடையும்.

மாநாட்டில் கௌரி காந்தன், சே.பரமேஸ்வரன், சுகுனரத்தினம் திருமதி சி.ஜனகா, திருமதி ச.தமிழ்ச்செல்வி ஆகியோரின் உரைகள் சிறப்பாக நடைபெறும்.

இந் நிகழ்வுகளை இந்து சமயம் சேவா சங்கத்தின் இணைப்பாளர் செல்வி வளர்மதி நெறிப்படுத்துகிறார்.

பாடசாலைகள், ஆலயங்கள், சனச மூக நிலையங்கள் இந்து மன்றங்கள் ஆகியோர் இணைந்து நடாத்துவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## 13 ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு இலங்கை - இந்தியா கூட்டுச் சதி

### லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி

13வது அரசியல் திருத்த சட்ட மூலத்தை இல்லாது செய்யும் முயற்சியில் இலங்கை - இந்திய அரசுகள் செயற்படுவதாக ஐ.தே.க குற்றம் சாட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

13 ஆவது திருத்தத்தை ஒழிப்பது குறித்து ஆளுந்தரப்பினரால் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவை நாட்டில் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளன. ஆனால் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வின் ஊடாகத் தீர்வை வழங்கவேண்டும் என்பதற்காக 1987ஆம் ஆண்டு 13 ஆவது திருத்தைக் கொண்டுவந்த இந்தியா மௌனம் சாதிக்கிறது.

2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் மீளாய்வுக் கூட்டத் தொடரில் 13 ஆவது திருத்தச்சட்டம் குறித்து இந்தியா பல சிபாரிசுகளை முன்வைத்தது.

கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மீளாய்வுக் கூட்டத்தொடரின் ஆரம்பத் தில் 13 ஆவது திருத்தச்சட்டம் குறித்து இந்தியா காரசாரமான பல கருத்துக்களை வெளியிட்டது.



இது இலங்கைக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

ஆனால், இறுதியில் குத்துக்கரணம் அடித்தது.

அதேபோன்று இலங்கையில் பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தியுள்ள 13 ஆவது திருத்தத்தை ஒழிப்பது தொடர்பான முயற்சிகள் குறித்தும் இந்தியா கருத்து எதனையும் வெளியிடவில்லை. தொடர்ந் தும் மௌனம் சாதிக்கிறது.

இந்தியாவால் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்ற கருத்து ஆளுந்தரப்பிலிருந்து வெளியிடப்பட்டு வருகின்ற நிலையில், இது விடயம் தொடர்பில் அரசுக்குத் தக்கப்பாடம் புகட்ட வேண்டிய தருணத்தில் தமது நிலைப்பாட்டை இந்தியா மாற்றிக்கொண்டது.

13ஆவது திருத்த ஒழிப்பு விவகாரத்தின் பின்னணியில் இந்திய அரசு செயற்பட்டு வருகின்றது.

இலங்கைஇந்திய அரசுகளுக்கிடையில் 13ஆவது திருத்த ஒழிப்பு விவகாரத்தில் ஓர் இரகசிய உடன் பாடு உள்ளது.

13 ஆவது திருத்தச்சட்ட ஒழிப்பு விவகாரத்தில் இந்தியா தொடர்ந்தும் மௌனம் காப்பதும், ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வு கூட்டத்தொடரில் அது தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டமை குறித்தும் நாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடமும் எடுத்துரைத்துள்ளோம்.

அத்துடன் இது விவகாரம் தொடர்பில் இலங்கை-இந்திய அரசுகளுக்கிடையில் இரகசிய உடன்பாடொன்று உள்ளது என்பதையும் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளோம் என்றார் லக்ஷ்மன் கிரியெல்ல.

தமிழ்நாதம்
Thamil Naatham
நவம்பர் மாதம் 15ஆம் திகதி வியாழக்கிழமை

# இலங்கை விவகாரத்தில் காங்கிரஸின் தலை தப்பியதாம்

"இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்த குற்றப் பிரேரணையை இந்தியா ஆதரிக்காது விட்டிருந்தால் இந்திய மத்திய அரசு கவிழ்ந்திருக்கும்" என்று கருத்து வெளியிட்டிருக்கிறார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் ஆலோசகரான ஸ்ரீ ராபல் மல்ஹோத்ரா. அதாவது கடந்த மார்ச் மாதம் ஜெனீவாவில் இடம்பெற்ற ஐ.நா.மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு. எதிராக நிறைவேற்றப்பட்ட குற்றப் பிரேரணை தொடர்பாகவே மல்ஹோத்ரா மேற்கண்ட கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றதாகக் கூறி அமெரிக்கா இந்தப் பிரேரணையை கொண்டு வந்தது. இந்தப் பிரேரணையை ஆதரித்து இந்தியா உட்பட 24 நாடுகள் வாக்களித்தன. இந்தப் பிரேரணைக்கு எதிராக பதினைந்து நாடுகள் வாக்களித்திருந்தன. அதாவது, இன்னொரு வார்த்தையில் சொல்வதானால் இலங்கைக்கு ஆதரவாக பதினைந்து நாடுகள் வாக்களித்திருந்தன. 47 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் எட்டு நாடுகள் நடுநிலைமை வகித்தன. அதாவது இந்த எட்டு நாடுகளும் இலங்கைக்கு எதிராகவோ, ஆதரவாகவோ வாக்களிக்கவில்லை என்பதே அர்த்தம்.

இந்தியா, இலங்கைக்கு எதிராக வாக்களிக்கும் என்று எவருமே எதிர்பார்த்திருக்காத சந்தர்ப்பத்தில், அமெரிக்காவின் குற்றப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தமை பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஏனெனில், "எந்தவொரு நாட்டையும் இலக்கு வைத்து கொண்டுவரும் குற்றப் பிரேரணைக்கு இந்தியா ஆதரவு வழங்காது" என்று இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் புதுடில்லி அரசாங்கம் அறிவித்திருந்தது.

இதில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று, அமெரிக்கப் பிரேரணையில் இருந்த கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் இந்தியாவின் தலையீட்டினால் மாற்றி அமைக்கப்பட்டன.

வார்த்தைகளும், வடிவங்களும் மாற்றி அமைக்கப்பட்ட பின்பே இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது. இரண்டாவது அம்சம் என்னவென்றால், திருத்தி அமைக்கப்பட்ட குற்றப் பிரேரணைக்கு இந்தியா ஆதரித்து வாக்களித்ததால், இந்தியாவை அடியொற்றி வாக்களித்த நாடுகளும் இருக்கின்றன. முள்ளிவாய்க்காலுக்குள் வன்னி யுத்தம் 2009ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வருவதற்கு சில நாட்கள் முன்னதாகத்தான் இந்தியாவின் லோகசபைத் தேர்தல் நடந்து முடிந்தது. காங்கிரஸ் கட்சி 206 தொகுதிகளைக் கைப்பற்றியது. ஆளும் கட்சியோடு கூட்டணி சேர்ந்து கொண்ட அனைத்துக் கட்சிகளையும் சேர்த்துப் பார்த்தால் ஆளும் கூட்டணிக்கு 248 ஆசனங்கள் கிடைத்தன. தி.மு.க.வும் ஆளும் காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகிக்கிறது.

தி.மு.க.விற்கு 18 ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. அனைத்திந்திய அண்ணா தி.மு.க விற்கு லோகசபையில் ஒன்பது ஆசனங்கள் கிடைத்திருந்தன. காங்கிரஸ் கட்சிக்கு எதிரணியாக விளங்கும் பாரதீய ஜனதாக் கட்சி 115 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தது. அதனோடு இணைந்த எதிரணிக் கூட்டணிக்கு மொத்தமாக 156 ஆசனங்கள் கிடைத்திருந்தன.

"இலங்கைக்கு எதிரான குற்றப் பிரேரணையின்போது, இலங்கையை ஆதரித்து இந்தியா வாக்களித்து இருந்தால் இந்திய மத்திய அரசு கவிழ்ந்திருக்கும்" என்று பிரதமர் மன்மோகன்சிங்கின் ஆலோசகரான ராபல் மல்ஹோத்திரா கூறியதன் தார்ப்பரியம் இதுதான். 18 ஆசனங்களை கொண்டிருக்கும் தி.மு.க.வோடு ஒன்பது ஆசனங்களை கொண்டிருக்கும் அ.தி.மு.க.வும் சேர்ந்து கொண்டு இந்திய மத்திய அரசுக்கு எதிராக வாக்களித்திருந்தாலும் கூட ஆட்சி கவிழக்கூடிய சாத்தியமுமே இல்லையென்று கூற முடியாது.

சுமார் 525 ஆசனங்களை இந்திய லோகசபை கொண்டது. பாரதீய ஜனதாக் கட்சியான எதிரணிக்கு குறைந்தது 265 ஆசனங்கள் கிடைத்தால் மட்டுமே, காங்கிரஸ் ஆட்சி கவிழக்கூடிய சாத்தியம் உண்டு. எனவே இந்திராகாந்திக்கும், ராஜீவ் காந்திக்கும் கூட ஆலோசகராக இருந்தவர் என்று கூறப்படும் மல்ஹோத்ரா கூட்டிக் காட்டிய கணக்கு தவறானதென்று கூறமுடியாது. ஏனென்றால் தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள மொத்தத் தொகுதிகளின் எண்ணிக்கை 39. இந்த அனைத்துத் தொகுதி எம்.பிக்களும் இந்திய மத்திய அரசை எதிர்த்து வாக்களித்திருந்தால் காங்கிரஸ் கூட்டணி கவிழ்ந்துவிடும் என்பது உண்மைதான்.

இலங்கையின் இன முரண்பாடுகளும் இறுதி யுத்தமும் தமிழகத்தில் கொதிநிலையை ஏற்படுத்தியது என்பதை மறுக்க முடியாது. அங்குள்ள பிரதான கட்சிகள் இரண்டும். ஏனைய உதிரிக் கட்சிகளும் தமது இருப்பைப் பேணுவதற்காக தமிழ் இன உணர்வாளர்களாகக் காட்டிக் கொண்டு தமிழ் நாட்டு மக்களுக்குப் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்கின்றன. உண்மையிலேயே தமிழகத்தில் இருந்து எழுந்த அழுத்தங்களும், நிர்ப்பந்தங்களும், ஆர்ப்பாட்டங்களுந்தான் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிப்பதற்கு அடிப்படைக் காரணமாகும். இதனை அப்பட்டமாகவே பிரதமர் மன்மோகன் சிங்கின் ஆலோசகரான மல்கோத்ரா தெரிவித்திருக்கிறார்.

"உள்ளூர் அழுத்தங்களும், கூட்டணி ஆட்சியின் நீர்ப்பந்தங்களுமே இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணைக்கு இந்தியா ஆதரவளித்தமைக்கு காரணமாகும்" என்று மிகத் தெளிவாகவே மல்ஹோத்ரா தெரிவித்திருக்கிறார்.

"இலங்கைக்கு எதிராக இந்திய அரசாங்கம் வாக்களித்தது என்பதற்காக இந்தியாவை இலங்கைக்கு எதிரானது எனக் கருதமுடியாது இதனை இலங்கை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்" என்றும் அவர் கூறியுள்ளார் அதுமட்டுமல்ல. "இந்தியாவின் தென்பகுதியில் உள்ள தி.மு.க. இந்தியாவின் மத்தியிலுள்ள கூட்டணி அரசின் முக்கிய பங்காளிக் கட்சியாகும்" என்றும் அவர் மிகத் தெளிவாகவே சொல்லியுள்ளார். தி.மு.க.வின் நிர்ப்பந்தத்துக்கு அடிபணிந்தே இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களித்திருக்கிறது. இந்தியா வாக்களித்திருக்கவில்லை என்றால், தி.மு.க.வுக்கும், ஆளும் கூட்டணிக்கும் ஜெயலலிதாவின் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. நிர்ப்பந்தித்திருக்கும். கூப்பாடு போட்டிருக்கும். கலகம் விளைவித்திருக்கும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# ஆற்றேன் அடியேன்



தமிழ்ச்சூழல் உற்சாகம் தரக் கூடியதாக இல்லை. தமிழ் எத்தனை தூரம் வளர்ந்திருக்கிறது என்பதை அளக்க ஒரு புதிய அளவுகோல் கிடைத்திருக்கிறது. 2012ம் ஆண்டு தொடக்கத்தில் விக்கிப்பீடியாவில் பல மொழிகளில் மொத்தமாக எத்தனை கட்டுரைகள் ஏறியிருக்கின்றன என்று தேடிப் பார்த்தேன். ஆங்கிலத்தில் 3,900,000 கட்டுரைகள், யப்பான் மொழி 791,000 கட்டுரைகள், சீனமொழி 385,000, அரேபிய மொழி 156,000, ஹிந்தி 93,000 என்று விடை வந்தது. தமிழில் 43,000 கட்டுரைகள் மட்டுமே. இதில் பரிதாபம் என்னவென்றால் ஒரு கோடிக்கும் குறைவானவர்கள் பேசும் ஹீப்ரு மொழியில் 129,000 கட்டுரைகள் ஏறி விட்டன. ஏழு கோடி மக்கள் பேசும் தமிழில் ஆக 43,000 கட்டுரைகள்தான். உலகத்தில் ஆக மூன்று லட்சம் பேர் மட்டும் பேசும் ஐஸ்லாண்டிக் மொழியில் கூட 36,000 கட்டுரைகள் எழுதப் பட்டுவிட்டன.

தமிழின் தொன்மையை நினைக்கும்போது பிரமிப்பாக இருக்கும். அதே சமயம் ஒருவித சோகமும் வந்து கப்பிக்கொள்ளும். இதை தவிர்க்க முடியாமல் இருக்கிறது. யேசுநாதர் பிறந்த சமயம் உலகின் சனத்தொகை 200 மில்லியன்தான். அதாவது இன்றைய பிரேசில் நாட்டு சனத்தொகை அன்றைய முழு உலகத்தின் சனத்தொகையாக இருந்தது. அப்படியானால் அன்று இந்தியாவின் சனத்தொகை என்னவாக இருந்திருக்கும்? 30 மில்லியன் என்று வைக்கலாம். தமிழ்நாட்டின் சனத்தொகை ஒரு மில்லியன் என்று எடுத்துக் கொண்டாலும் அப்பொழுதே சங்க இலக்கியம் படைக்கத் தொடங்கிவிட்டார்கள். தமிழர் நாகரிகம் எத்தனை உயர்ந்ததாக இருக்கவேண்டும். தமிழர்களிடம் நாவல், சிறுகதை வடிவம் இருந்ததில்லை. ஆங்கிலேயர்களிடம் இருந்து அவற்றை கடன் வாங்கியதுதான். ஆனால் தொகை இலக்கியத்தை கண்டு பிடித்தது தமிழர்கள்தான். புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை என தொகை நூல்கள் தமிழிலே தான் முதலில் வந்தன. ஆயிரம் வருடங்கள் கழித்துத்தான் ஆங்கிலத்தில் டிழமம ழுக நுஒநவநச என்ற முதல் தொகை நூல் வந்தது. அதையிட்டு நாங்கள் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

நான் பிறந்தபோது உலகத்தின் சனத்தொகை 2.3 பில்லியன். இன்று அது 7.0 பில்லியன், மூன்று மடங்காக வளர்ந்திருக்கிறது. ஆனால் பூமியின் அளவு அதேதான். இந்த இடைப்பட்ட காலத்தில் தமிழின் வளர்ச்சி எப்படி இருக்கிறது. மூன்று மடங்கு வளர்ந்திருக்கிறது என்று சொல்ல முடியுமா? 2009ம் ஆண்டு யூன் மாதம் 16ம் தேதியை எல்லோரும் கொண்டாடினார்கள். என்ன விசயம் என்று கேட்டபோது ஆங்கில வார்த்தைகளின் எண்ணிக்கை அன்று ஒரு மில்லியனை தொட்டு விட்டது என்றார்கள். யாரோ கணக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழில் எத்தனை வார்த்தைகள் உள்ளன என்று யாராவது கணக்கு வைத்திருக்கிறார்களா?

நெதெடைசுந்தர ராமசாமியின் நினைவுகளை அவருடைய மனைவி கமலா ராமசாமி "நெஞ்சில் ஒளிரும் சுடர்" என்ற தலைப்பில் நூலாக எழுதிப் பதிவு செய்திருக்கிறார். அந்த நூலின் இறுதிப் பகுதியில் அவர் எழுதிய வார்த்தைகள் என் மனதின் ஆழத்தில் போய் பதிந்துவிட்டன. "முழுக்க அவருடைய இருதயம் பற்றிய அக்கறையில்தான் இருந்தோம். சுவாசப்பையில் ஒரு பிரச்சினை ஏற்படப்போகிறது என்னும் நினைப்பே

**அ.முத்துலிங்கம்**

இருக்கவில்லை. பல்மனரி ஃபைப்ரோஸிஸ் என்றார்கள். என்னவாகவும் இருந்துவிட்டுப் போகட்டுமே. இனி எனக்கொன்றுமில்லை." இப்படி அவர் எழுதி நூலை முடிவுக்கு கொண்டு வருகிறார். "என்னவாகவும் இருந்து விட்டுப் போகட்டுமே" என்ற வரிகளை என்னால் மறக்க முடியவில்லை. தமிழையும், தமிழ் இலக்கியத்தையும், அதன் எதிர்காலத்தையும் நினைக்கும்போது இந்த வார்த்தை தொடர்தான் மறுபடியும் மறுபடியும் என் நினைவுக்கு வந்து இடர் செய்கிறது. உச்சக் கட்ட விரக்தியை வேறு எந்த வார்த்தைகளால் வர்ணிப்பது?

சமீபத்தில் மின்னஞ்சலில் ஓர் ஓவியர் தொடர்புகொண்டார். பத்திரிகைகளில் வரும் என்னுடைய சிறுகதைகளுக்கு தான் படம் வரைந்திருப்பதாகக் கூறினார். என்னுடைய முதல் கேள்வி "உங்களுக்கு சன்மானம் உண்டா? என்பதுதான். அவர் உண்டே என்று மட்டும் பதிலளித்தார். எவ்வளவு சன்மானம் என்று நாகரிகம் கருதி நான் கேட்கவில்லை. அவரும் சொல்லவில்லை. ஆனால் பத்திரிகை ஆசிரியர் என்னிடம் சொன்னது நினைவுக்கு வந்தது. "எங்கள் பத்திரிகையில் எழுதுவதால் உங்களுக்கு பேரும் புகழும் கிடைக்கிறது. நாங்கள் எழுத்தாளருக்கு சன்மானம் எதுவும் வழங்குவதில்லை." அது நல்ல சமாதானமாகத்தான் பட்டது. ஆனால் ஓவியக்காரருக்கு மட்டும் பேரும் புகழும் கிடைப்பதோடு சன்மானமும் கிடைத்தது. இது எப்படி நியாயம் என்பது எனக்கு தெரியவில்லை.

"எதற்காக சிறுகதைகளுக்கு ஓவியம் வரைகிறார்கள்?" என்று அதே பத்திரிகாசிரியரிடம் கேட்டேன். அவர் சொன்னார், "ஒரு நல்ல சித்திரம் வாசிப்பை தூண்டுகிறது" என்று. "சித்திரமே இல்லாவிட்டால் வாசகர் என்ன செய்வார்?" என்று கேட்டேன். அவர் "வாசகர் வாசிக்காமல் போகக் கூடும்" என்றார். "வாசகர்கள் படங்களைப் பார்த்து ஈர்க்கப்படுகிறார்கள் என்றால் படங்களை மாத்திரம் பிரசுரிக்கலாமே?" எனக் கேட்டேன். அதற்கு அவரிடம் பதில் இல்லை. அவர் தன் பத்திரிகையில் படம் வரையும் ஓவியர் ஒருவருக்கு கொடுப்பதாகச் சொன்ன பணம் நான் என் வாழ்நாளில் சிறுகதை ஒன்றுக்கு பெற்ற ஆகக்கூடிய சன்மானத்திலும் பார்க்க இரண்டு மடங்கு அதிகமானது. ஆனால் கட்டுரையையோ கதையையோ எழுதியவருக்கு ஒரு சதம்கூட கொடுக்காமல் இருப்பது அவருக்கு குற்றமாகத் தெரியவில்லை. ஒரு படத்தை காட்டி வாசகரை இழுத்து என் கட்டுரையையோ கதையையோ படிக்க வைப்பது எனக்கு பெரிய இழுக்காகப்பட்டது. என்னை என்றுமில்லாத விதமாக ஒருவிதமான துக்கம் ஆட்கொண்டது. (இதே கட்டுரையோ சிறுகதையோ புத்தகமாக வெளிவரும்போது அங்கே சித்திரங்கள் ஒன்றுமே இரா என்பது நினைவுக்கு வந்தது. புத்தகத்தை வாங்கும் வாசகர்கள் அதில் உள்ள எழுத்தை மட்டுமே படிப்பதற்கு வாங்குகிறார்கள். அது பெரிய ஆறுதல்.) சித்திரக்காரருக்கு சன்மானம் வழங்கும் பத்திரிகை அந்தக் கதையையோ கட்டுரையையோ கவிதையையோ எழுதிய ஆசிரியருக்கும் சன்மானம் வழங்க வேண்டும். இல்லையேல் இருவருக்கும் ஒன்றுமே வழங்காமல் இருக்கலாம். ஆனால் சித்திரக்காரருக்கு கொடுத்து ஆசிரியரை நிராகரிப்பது உச்சகட்டமான அவமானம் என்றுதான் எனக்குப் பட்டது.

முதலாம் உலக யுத்தம் நடந்தபோது ஒரு போர்வீரனிலும் பார்க்க குதிரை பெறுமானம் உள்ளதாகக் கருதப்பட்டது. ஒரு போர்வீரனும் குதிரையும் ஆபத்தில் இருந்தால் முதலில் குதிரை காப்பாற்றப்பட்டது பின்னர்தான் போர்வீரன். குதிரை பீரங்கியை இழுக்கும், ராணுவத்துக்கு தேவையான உணவுப் பொதிகளைகாவும். போர்வீரனைக் ஏற்றிக் கொண்டு நீண்ட தூரம் பயணம் செய்யும். இதுவெல்லாம் போக உணவு தீர்ந்த சமயத்தில் குதிரையைக் கொன்று சமைத்து சாப்பிடக்கூடியதாக இருக்கும். அது போலத்தான். சித்திரக்காரர் ஓர் எழுத்தாளரிலும் பார்க்க மதிப்பாக பார்க்கப்படுகிறார்.

தமிழ்ப் புலவன் எந்தக் காலத்திலும் மதிக்கப்பட்டது கிடையாது. அதியமான் நெடுமான் அஞ்சியின் வாசலில் நெடுங்காலம் நின்று வெறுங்கையோடு திரும்பிப்போன ஔவையாரின் நினைவு வந்தது. 2000 வருடமாக வாசலில் நின்று பழகிவிட்டது. தமிழ் படைப்பது என்றால் அப்படித்தான். ஆற்றேன் அடியேன்.

**(இந்தக் கட்டுரையின் முகப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் சித்திரம், தாராசுரம் கோயிலில் இருக்கும் அரிய வண்ணப் படைப்பு. நூற்றாண்டு காலப் பழமை வாய்ந்த இப்பொக்கிஷத்தின் மீது இருக்கும் கிறுக்கல்கள், கட்டுரையில் அ.முத்துலிங்கம் அவர்கள் சொல்லியிருக்கும் தமிழின் அத்தனை வீழ்ச்சியையும் உருவகப்படுத்துவதாக உள்ளது.)**

# நமது வரலாற்றாய்வின் அடிப்படை என்ன?

> பல்வேறு வரலாற்றுக் கருப்பொருட்களுள் ஒன்று என்பதே உண்மைநிலை. வரலாறு உட்பட எல்லாவற்றிலும் அரசியல் உண்டு. ஏதோ ஒரு பக்கம் சாராத வரலாறே கிடையாது. அறிவியலும் சார்புடையதே. இன்றைய உலக வாணிகக் குழுக்கள் வளர்ந்து நாள்தோறும் பரப்பும் போலி அறிவியல் உண்மைகளைப் பற்றிச் சொல்லவில்லை. உண்மையும் பக்கச் சார்பு உடையதே. உண்மையில் பயனடைவோருக்கு சார்பாகவும் பாதிக்கப்படுவோருக்கு எதிராகவும் அது உள்ளது. எந்த ஒரு அறிவியல், வரலாற்றுக் கருத்தையும் சமூகம் ஏற்றுக் கொள்ள வேண்டுமாயின் அதற்கு அரசியல் பின்னணி தேவைப்படுகிறது.

எனும் நிலை ஏற்பட்டிருக்குமா? கற்காலக் கருவிகள் ஓரிடத்திலே கிடைத்தால் அதை வைத்து அங்கு வாழ்ந்த மக்கள் என்ன தொழில் செய்தார்கள், என்ன உணவு உண்டார்கள்? என்றெல்லாம் கூறுகிறார்களே அது எப்படி? கற்கருவிகளில் எழுதி வைக்கப்பட்டுள்ளதா என்ன? அதே கருவிகளுடன் இன்றும் சில மக்கள் வாழ்ந்தால் அவர்களைப் பார்த்து எல்லா மக்களுக்கும் அதை பொதுமைப் படுத்துவது எத்தனை தூரம் துல்லியமான முடிவைத் தரும்?


பெற்றுள்ளது. ஆனால் படித்த சராசரித் தமிழர்களின் மூளைகளில் இக்கருத்து பதிவாகவேயில்லை. இதற்கு திராவிட இயக்க அரசியல் ஒரு காரணமாக இருக்கலாம். அதைவிட மேற்கிலிருந்து வந்தவர்கள் என்பதைவிட குமகிக்கண்டத்திலிருந்து வந்தவர்கள் என்று கூறுவது அவர்களுக்கு கூடுதல் பாதுகாப்புணர்ச்சியினைக் கொடுக்கலாம். அதுபோலதான் 19ம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பாதியிலும் ஐரோப்பாவில் செருமானியாகின்

என்ற பெயரில் மக்களைப் பற்றியும் ஊர்களைப் பற்றியும் அனைத்து செய்திகளையும் திரட்டி அளித்தனர். நமது பல்கலைகழக நாட்டார் வழக்காற்றியல் துறைகள் இதற்காக உருவாக்கப்பட்டவைதான்.

இவ்வாறு திரட்டப்படும் தகவல்களில் மரபுசார் அறிவியல் முறைகள், வாழ்க்கை நுட்பங்கள், சடங்கு வடிவில் நம்மிடையே நிலவும் பலவிதமான வரலாற்றுத் தகவல்கள் ஏராளமாக உள்ளன. இத்தகைய செய்திகளை திரட்டுவோருக்கு

உயர்த்திக் கொள்வது போலவே அவர்களும் செயல்பட்டுள்ளனர். 17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உசர் எனும் ஐகிய(ஐகி) தலைமை பேராயர் கி.மு. 4004 ஆண்டு அக்டோபர் மாதம் 26ஆம் நாள் காலை துல்லியமாக 9 மணிக்கு உலகம் இறைவனால் படைக்கப்பட்டது என்று எழுதியதில் இருந்து ஐரோப்பியாகின் தற்கால வரலாற்றுப் பணி தொடங்கியது. பின்னர் ஏரோடோட்டசின் வரலாறு, மெசப்பட்டோமியாவில் கிடைத்த அகழ்வுச்சான்றுகள், நூல்கள், எகிப்து, இறுதியாக சிந்துசமவெளி அகழ்வாய்வு என்றும், மொழிகள் பண்பாட்டு கூறுகள், உயிர்வகைகளை என்றும் வரலாற்றுக் கருப்பொருட்கள் குவிந்தன.

இவற்றைத் தங்களைப் பற்றிய பெருமிதம் உருவாக்கிய உள்ளுணர்வு, பலவரலாற்றுக் கருப்பொருட்களின் உண்மையான குறிதகவினைப் புகிந்து கொள்வதற்கு அவற்றொடு அவர்களுக்கு நேரடி உறவு இல்லாமை முதலிய பல இயல்புகளால் தவறாகவும் இவர்கள் புகிந்து கொண்டதுண்டு. ஆனால் அவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் மனச் சான்றுக்கு மாறாக செயல்பட்டிருப்பர் என்று என்னால் கூறமுடியவில்லை. இப்போதுதான் பணக்கார நாடுகள் தங்கள் மேலாண்மையை நிறுவும் பொருட்டு நேரடி வரலாற்றாய்வில் ஈடுபடுகின்றன.



"பெரும்பாலான வரலாறுகள் விருப்பக் கற்பனைகள் மீதி ஊகங்கள்" என்பது கலாசாரத் தின் வரலாறு என்ற தலைப்பில் 14 மடலாய்வுகளை எழுதிய வில்டியூரண்டின் கூற்றாகும். "வரலாறு என்பது உண்மை பெயர்களைக் கொண்ட ஒரு கட்டுக்கதை, கதை என்பது கற்பனைப் பெயர்களைக் கொண்ட ஓர் உண்மை விவரணம் என்பது இன்னொருவர் கூற்று - பெயர் நினைவு இல்லை. இருந் தும் மனிதனுக்கு வரலாறு என்று ஒன்று தேவைப்படுவதனால் நாம் வரலாறுகளை எழுதிக் கொண்டி க்கிறோம்.

புறவயமான அதாவது பருப்பொருட் சான்றுகள் என்பவை தொல்பொருட்கள், அகழ்வாய்வுச் சான்றுகள், வரலாற்று நூல்கள், கல்வெட்டுக்கள், பட்டயங்கள் வேறு எழுத்துச் சான்றுகள் முதலியவையே. தொல்பொருட் சான்றுகளையும் அகழ்வுச் சான்றுகளையும் வைத்துக் கொண்டு ஒருபொழுதும் வரலாற்றை எழுதிவிட முடியாது. அவற்றைப் பட்டியலிடத்தான் முடியும். புலனறிவு சார்ந்த பட்டறிவின் எல்லை அதுதான். அவற்றிலிருந்து வரலாற்றினை உருவாக்குவது மெய்யியல் கோட்பாடுகளேயாகும். ஆய்வுக் காலத்தில் நிலவும் வரலாறு குறித்த கருத்துக்கள், வரலாறு சார்ந்த தேவைகள் தரவுகளை ஆய்ந்து முடிவுகளை முன்வைக்கும் விதத்தை உயத்தறிதல் (அனுபமானப் பிரமாணம் - Inference) என்கிறோம். அவ்வாறு ஒருவர் உய்த்தறிந்ததை அதை ஏற்காத ஒருவர் வெறும் ஊகம் என்று கூறலாம். உய்த்தறிதலுக்கும் ஊகத்துக்கும் இடையிலான எல்லைக்கோடு மிகவும் மெல்லியதாகும்.

புலனறிவுச் சான்றுகள் வரலாற்றாய்வுக்கு போதா. அப்படி போதுமானவையாக இருந்தால் ஏறக்குறைய 75 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட சிந்து சமவெளி அகழ்வாய்வுச் சான்றுகள் தந்த வரலாற்றுத் தெளிவுகளைவிட எழுந்துள்ள விடை-காணப்படாத வினாக்களே மிகுதி

ஆனால் அதைத்தானே நாம் செய்து கொண்டிருக்கிறோம்? எனவே புறவயச் சான்றுகள் முதல்நிலை கருப்பொருட்கள் என்பது சரியல்ல. அவை பல்வேறு வரலாற்றுக் கருப்பொருட்களுள் ஒன்று என்பதே உண்மைநிலை.

வரலாறு உட்பட எல்லாவற்றிலும் அரசியல் உண்டு. ஏதோ ஒரு பக்கம் சாராத வரலாறே கிடையாது. அறிவியலும் சார்புடையதே. இன்றைய உலக வாணிகக் குழுக்கள் வளர்ந்து நாள்தோறும் பரப்பும் போலி அறிவியல் உண்மைகளைப் பற்றிச் சொல்லவில்லை. உண்மையும் பக்கச் சார்பு உடையதே. உண்மையில் பயனடைவோருக்கு சார்பாகவும் பாதிக்கப்படுவோருக்கு எதிராகவும் அது உள்ளது. எந்த ஒரு அறிவியல், வரலாற்றுக் கருத்தையும் சமூகம் ஏற்றுக் கொள்ள வேண்டுமாயின் அதற்கு அரசியல் பின்னணி தேவைப்படுகிறது.

உதாரணமாக 150 ஆண்டுகளுக்கு முன் தென் தமிழகத்தில் சமய ஊழியம் செய்ய வந்த கால்டுவெல்லார் தமிழையும் தென்னிந்திய மொழிகளையும் ஆய்வு செய்து அவற்றுக்கு திராவிட மொழிகள் என்று ஒரு பெயரும் சூட்டி அவற்றினைப் பேசும் மக்களை "திராவிட இனம்" என அடையாளம் கொடுத்து "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" எழுதியபோது திராவிடர்கள் நண்ணிலக் கடற்கரை (மத்தியதரைக் கடற்கரை) உட்பட ஐரோப்பிய ஆசியக் கண்டங்களின் ஆறு பகுதிகளிலிருந்து வந்தவர்கள் என்று எழுதினார். இது வெறும் சொற்களின் ஒற்றுமையை வைத்து மேற்கொள்ளப்பட்ட தலைகீழ் முடிவாகும். பண்டைய வரலாற்றுத் தடயங்கள் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிய நகர்வுகளையே காட்டுகிறன. ஆனால் கால்டுவெல்லாகின் இந்த முடிவைத்தான் "அங்கீகரிக்கப்பட்ட" ஆய்வாளர்கள் தலைமீது தாங்கி நிற்கிறார்கள்.

கடந்த பல ஆண்டுகளாக தொடக்கப்பள்ளி முதல் இக்கருத்து பாடநூல்களில் இடம்

ஆகிய வெறி கொண்ட அரசியலுக்கு எதிராக திராவிட நாகாகீக மேன்மையும் குமகிக்கண்ட நாகாகீக வளர்ச்சியையும் கூற வேண்டிய கட்டாயம் ஐரோப்பியனுக்கு இருந்தது. இன்று அந்த அச்சம் நீங்கி உலக மேலாண்மைக்கு இந்தக் கருத்துக்களை மழுங்கடித்து "இந்தோ ஐரோப்பிய இன" மேன்மையை தூக்கிப் பிடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஆகவே அத்துறை ஆய்வாளர்கள் கைவிடப்பட்டனர். அவர்கள் பழிக்கப்படுகின்றனர்.

இந்தியப் பல்கலைக் கழகங்கள் தரும் பட்டங்கள், குறிப்பாக முனைவர் பட்டங்கள், அப்பட்டங்களைப் பெற்றவர் சொந்தமாக சிந்திக்கும் திறனை தன்னிடமிருந்து முற்றிலுமாக அழிப்பதில் வென்று பெற்றுவிட்டார் என்று கூறும் சான்றிதழ்களாகும். தான் எழுதும் எந்த ஒரு கருத்துக்கும் வேறு ஒருவரை கட்டாயம் சான்று காட்டியாக வேண்டும். வேறு எதில் விட்டுக் கொடுத்தாலும் "ஆய்வாளாகின்" சொந்தக் கூற்றாக ஒரு சொல் கூட இடம் பெற்றுவிடலாகாது என்பதில் "வழிகாட்டிகள்"மிகவும் கண்டிப்பாக இருப்பார்கள்.

அண்மைக்காலம் வரை அமொகிக்கா முதன்மையாகவும், பிற பணக்கார நாடுகளும் அங்குள்ள பல்கலைக் கழகங்களும் "அறக் கட்டளைகளும்" மாநிலத்துக்கு ஒருவர் துறைக்கொருவர், பல்கலைகழகத்துக்கு ஒருவர் என்று தனித்தனியாகவும் தனித்துறைகளை ஏற்படுத்தியும் தம் நாட்டிலிருந்து தொகுப்பாளர்களை நம் நாட்டில் வைத்திருந்தார்கள். அவ்வரசுகளும் பல்கலைகழகங்களும் "அறக்கட்டளை"களும் தரும் பணத்தில் அவர்கள் விரும்பும் தலைப்புகளில் நம் பல்கலைகழகங்கள் மூலமாகவும் நேரடியாகவும் நம்மவர்களால் "ஆய்வுகள்" செய்யப்பட்டன. பல்கலைகழக நூலகங்களில் வைக்கப்பட்டிருக்கும் ஆய்வேடுகளிலிருந்து அதற்கென்று அமர்த்தப்பட்டவர்கள் அவற்றை திரட்டிக்கொண்டு போயினர். இவை போக மக்களிடையே வெவ்வேறு துறைகளில் செய்தி திரட்டுவோர் தொண்டு செய்வது

இவற்றின் உண்மையான மதிப்பு தொகிந்திருக்கவில்லை. அமைப்பியல் போன்ற போலிக் கோட்பாடுகள் மீது அவர்களுக்கு கவர்ச்சி உள்ளது. அவற்றை அரைகுறையாக உருவேற்றிக் கொண்டு இம்மரபுசார் அறிவுகள் மீது தங்கள் அளவில் செயல்படுத்திப் பார்க்கிறார்கள்.

இவ்வாறு வந்து குவியும் செய்திகள் மிக அதிகம். உலகமே செய்திகளாக மாறிவிடுகிறது. இச்செய்திகளை தொகுத்து ஒழுங்குசெய்து பல்வேறு விதத்தில் பயன்படுத்திக்கொள்ள மாபெரும் கணிப்பொறியாளர் படை தேவையாகிறது. எனவே நம் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் கணினிகளால் நிரம்பி வழிகின்றன. 45 நாளில் முழு வளர்ச்சி பெறும் கழிக்கோழிகள் போல நாம் பொறியாளர்களை உருவாக்கி ஏற்றுமதி செய்கிறோம். இங்குள்ள படித்தவர்கள் ஒவ்வொருவரும் மேலைப்பணக்கார நாடுகளுக்கு பணியாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்ட மனிதக் கணினிமென் பொருட்களாகவே உள்ளனர். வரலாற்றாய்வும் இவர்களாலேயே இங்கு செய்யப்படுகின்றது.

வரலாற்று வரைவென்பது எளிய பணிஅல்ல. சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் நம்நாட்டு வரலாற்றாசிரிகியர்கள் தமிழக, இந்திய வரலாறுகளை வரைவதற்காக மேற்கொண்ட உழைப்பு கொஞ்சநஞ்சமல்ல. பார்ப்பனர்களும் வெள்ளாளர்களும் பெரும்பான்மையாக கொண்ட அவ்வறிஞர்கள் செய்துள்ள பணிகள் அளவிட முடியாதவை. அன்று நிலவிய கோட்பாடுகளினாலும், சொந்த மனச் சார்புகளினாலும் அவற்றில் குறைபாடுகள் இருந்தாலும் அவர்களுடைய பணியை எண்ணிப் பார்க்கும்போது மனதுக்குள் வணங்கத் தோன்றுகிறது. ஆனால் இதை இயலச் செய்ய தளம் அமைத்தவர்கள் ஐரோப்பியர்களே. அவர்களும் வானிலிருந்து குதித்து வரவில்லை. பச்சைக் குழந்தை உலகை பார்த்து படிப்படியாக தன் பட்டறிவினாலும் முயற்சியினாலும் தன் அறிவை மேலும் மேலும்

ஐரோப்பியருக்கும் அவர்கள் அடிமைப்படுத்திய நாடுகளுக்கும் பழங்கால வரலாறு உண்டு. எனவே தங்களையும் பிறரையும் புரிந்துகொள்ள வேண்டிய தேவைக்காக ஐரோப்பியர் பழங்கால பியங்கள், மத அமைப்புகள், மரபுவழி கதைகள், செவிச் செய்திகள், தொன்மங்கள் ஆகியவற்றையும் வரலாற்று கருப்பொருட்களாகக் கொண்டனர். ஆனால் அமொகிக்காவுக்கு அப்படி பழைய வரலாறு கிடையாது. அவர்களின் தொடக்க வரலாறு பெருமைப்படத்தக்கதாகவும் இல்லை. அத்துடன் தங்களால் மேலாண்மை செய்யப்படும் மக்களை வரலாற்றவர்களாக ஆக்க வேண்டிய தேவையும் அவர்களுக்கு இருந்தது. எனவே அதற்கேற்ற வரலாற்று வரையறைகளை அவர்கள் உருவாக்கினர். மரபுக் கதைகளையும் தொன்மங்களையும் பண்டைய இலக்கியங்களையும் எல்லாம் துணுக்குளாக உடைக்கமுடியும் என்றனர். (32 அடிப்படைத் துணுக்குகள் என்று நினைவு) அந்த துணுக்கு அடிப்படைக்குள் சிலப்பதிகாரத்தை அடைக்க முடியவில்லை. நாட்டார் கதைப் பாடல்களில் நிகழ்த்துவோனுக்குத் தேவைக்கு மிஞ்சிய சிறப்பு கொடுத்தார்கள். நிகழ்துவோனால் கதையின் போக்கை முற்றிலும் மாற்றமுடியும் என்றனர். ஆனால் நிகழ்த்துவோன் ஒரு கூட்டுக்குழு மனத்துக்கு கட்டுப்பட்டவன் என்பதே உண்மை நிலை. மொத்தத்தில் பழைய வரலாறுள்ள குழுமங்களின் வரலாற்று கருப்பொருட்களில் வரலாற்று உள்ளடக்கம் இல்லை என்று தவறாக உணர்த்துவது தான் அவர்கள் நோக்கம்.

மொழியியலில் கூட இதைக் காணமுடியும். சொற்களின் வேர் களை கண்டு விளக்க முனை வது வரலாற்று மொழியல், ஒப்பந்த மொழியியல் அதன் ஒரு கிளை - சொற்பிறப்பியல் ஆய்வு அதற்குப் பயன்படும்.

# நேற்றைய முதுமை இன்றைய இளமை நாளைய வலிமை

இவ்வளவு காலமும் மிகவும் கொடிய போர்ச்சூழலுக்குள் அகப்பட்டு அத்தனை வேதனைகளையும் சுமந்து எத்தனையோ இழப்புகளையும் தாங்கிநின்று வறுமை, வேலைவாய்ப்பின்மை, உணவுப்பண்டங்களின் தட்டுப்பாடு, விலையேற்றம், உயிரோடு இருப்போமா என்ற திடமில்லாத நாளாந்த மனப்பதட்டம், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கணப்பொழுதும் அச்சத்துடன் வாழும் வாழ்க்கை என்று மூச்சுவிட முடியாத, தாங்கொணா சுமைகளையும் வேதனைகயையும் தமிழ் சமூகம் தாங்கி நின்றது. ஒட்டுமொத்த தமிழ்சமூகமும் அனுபவித்த சொல்லொணாத் துன்பங்கள் துயரங்கள் சொல்லி மாளாதவை.

இங்கு இதனை எழுதிக்கொண்டிருக்கும் என்னைவிட அதனை நேரடியாகவும் நடைமுறையிலும் உடலாலும் மனதாலும் நேரில் அநுபவித்தவர்கள் நாட்டிலே தங்கிவிட்ட நீங்கள் தான். நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்கு சென்று தஞ்சமடைந்த நாங்கள் அவலமான இடப்பெயர்வுகள் உயிரிழப்புகள், என்ற இந்த மிகக் கொடிய போரின் கொடூரங்களை, வெறுமனே உணர்ந்தும் புரிந்துகொள்ளக் கூடியவர்களாகவே மட்டுமே வேற்றுநாடுகளில் வசித்தோம். இக் கொடிய போர் விடுதலைப்போர் என வெடித்துக்கிளம்பிய ஆரம்பகாலத்தில் அதன் அங்கங்களாகவும் இலக்குகளாவும் நாங்கள் இருந்ததனால் நாங்கள் நாட்டைவிட்டு வெளியேறி வந்திருந்தாலும் அதே போரின் நீட்சியும் தொடர்ச்சியும் என்ன கொடுமைகளை எந்த அவலங்களை எப்படியான வாழ்க்கைச் சுமைகளை உருவாக்கும் என்பது போரின் ஆரம்பகாலத்தில் நாங்கள் அநுபவித்து அறிந்தவை தான்.

எந்த இடத்திற்கும் எவ்வேளையிலும் நடுநிசியிலும் கூட எந்த அச்சமோ கவலையோ இன்றி போய்த் திரும்பலாம் என்ற சூழலில் பிறந்து வளர்ந்து ஒரு சிறு கன்றுக்குட்டியின் சுதந்திரத்தோடு துள்ளித்திரிந்த எங்கள் பால்யவயது இன்றைய இளம் சந்ததியான உங்களுக்கு வாய்க்கப்பெறவில்லை. இறுகக் கட்டிப்போட்டது போல் பிறந்த காலம் தொட்டு வளர்ந்துவந்தவர்கள் நீங்கள். குடும்ப, சொந்த கடப்பாடுகள், பொறுப்புகள், உற்சாகமான உழைப்பு என்பதைத் தவிர வேறெந்த வெளிச்சூழலும் எங்களை கட்டுக்குள்ளடக்கி வைக்காத எமது பால்யகாலங்கள் எமது வாழ்நாட்களின் ஆரம்பப்பகுதியாகும். பின்னர் படிப்படியாய் மேலெழுந்துவந்து எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிவைத்த போர்மேகங்கள், சூழ்ந்து கருக்கொண்டு திரண்டு கொடூரங்களை வாழ்வில் அனர்த்தங்களாய் பொழிந்து, அத்தனை அமைதியையும் சுதந்திரத்தையும் எம்மிடமிருந்து வாரி அள்ளிக் கொண்டு சென்ற காலம் எமது விடலைப்பருவ காலமாகும்.

போருக்குள்ளேயே பிறந்து அதிலேயே அவஸ்தையுடன் வளர்ந்தும் வந்த நீங்கள் போரின்றிய சூழலின் பெறுமதியை அளவிட அதற்கு முன்னரே பிறந்திருக்கவில்லை என்பது உங்கள் குற்றமல்ல. ஆனால் இவையிரண்டுக்கும் இடையில் அமைதியிலிருந்து போருக்குள் நாங்கள் அள்ளி தூக்கிவீசப்பட்டதனால் அமைதி என்ற நிழலின் அருமை போர் என்ற கொடும் வெய்யிலில் மட்டும் வாழ்ந்த உங்களை விட எங்களுக்கு மனதில் இருக்கின்றது. அந்த அமைதியானது இத்தனை அழிவுக்குப் பின்னாலும் உங்களுக்கு வாய்க்கப்பெறுமா என்ற ஆதங்கத்துடன் தான் நாங்கள் இங்கு வாழ்கிறோம்.



அந்தப் போரின் நீட்சியின் சுமைகளும் வேதனைகளும் இழப்புகளும் உங்களின் மேல் சுமைகளாக தொடர நாங்கள் தூரதேசத்திற்கு புலம் பெயர்ந்தோம். அடிக்கடி வந்துபோய் உறவுகளை பேணி பாதுகாத்து விருத்தி செய்யமுடியாத தொலைவிலிருந்தோம். நாங்கள் எறி-கணை வீச்சு, துப்பாக்கிக் கொலைஞர்கள், தெருக்களில் நடமாட முடியாத அச்சம் என்பனவற்றிலிருந்து விடுபட்டு தொலைதூரத்திலிருந்தாலும் எண்ணங்களால் பழைய தெருக்களில் நடமாடியபடியே .இருந்தோம்.

இன்றைக்கு பூட்டப்பிள்ளைகளோடும் பேரப்பிள்ளைக-ளாகிய உங்களோடும் சூழ இருக்கின்ற எங்கள் அப்பா அப்பா உங்கள் அப்பப்பா -அம்பப்பா அம்மம்மா - அப்பம்மா எட்டுப் பிள்ளைகளை பெற்று, வளர்த்து, ஒழுங்காக நிரந்தரமான வருமானமின்றிய காலங்களை எல்லாம் எதிர்கொண்டு, வளையாது சளையாது எங்களது உணவுக்கும் உறைவிடத்துக்குமாய் உழைத்து இன்று வயதால் இழைத்துத் தேய்ந்து போயிருக்கிறார்கள். எவரிடமும் இவர்கள் எங்களை கடனாளியாக்கியதில்லை கையேந்த வைத்ததுமில்லை என்பதையிட்டு அவர்கள் பெருமையுடன் மதிப்புடனும் நெஞ்சில் நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

இப்படி இவர்கள் தங்கள் தலையில் குடம் குடமாய் தண்ணீரைச் சுமக்காவிட்டால் இடுப்பொடிய நடக்காவிட்டால் தண்ணீர் பெறவும் தாகம் தீர்க்கவும் வேறுவழியே இல்லை.

குடிப்பதற்கு இப்படி என்றால் அழுக்கான உடுப்புகளையும் துணிகளையும் தலையிலோ இடுப்பிலோ சுமந்துகட்டி அதேயளவு தூரம் நடந்து சென்று கிணறுகளில் வாளிவாளியாய் தண்ணீர் இறைத்து தோய்த்து துவைத்து காயவிட்டு பின்னர் திரும்பவும் வீட்டுக்கு சுமந்து வருவது வாராந்தக் கடமை பெண்களுக்கு. சிறுபராயத்து ஆண்களான நாங்கள் அன்று இவைபற்றி எண்ணிப் பார்த்தது கூட கிடையாது. ஏன் பெரியவர்களான ஆண்களும் தான்.

இவை விட விறகு சேகரிப்பது ஆடு கோழி வளர்ப்பது என்பது இத்தனை வேலைகளுக்கிடையிலும் முயற்சிகள் எதுவுமின்றி இருக்க மறுக்கும் ஒரு மூத்த தலைமுறையின் பண்பாடாகும். உங்கள் எல்லோரையும் நான் பாராட்டவும் தட்டிக்கொடுக்கவம் விரும்புகிறேன். ஆனால் அதேவேளையில் பேரப்பிள்ளைகளில் நான் உங்களுக்கு முன்னுதாரணமாகக் காட்டவிரும்புவது நிமலனைத் தான்.

கீழ்க்கண்ட ஆங்கில முதுமொழிக்கிணங்க கிடைக்கின்ற உதவிகளை படிக்கட்டுகளாக எடுத்து அதன் மூலம் சொந்தமான உழைப்பிலும் முயற்சியிலும் தன்னை வாழ்வில் நிலைநாட்டுவதிலும் தனது சமூகத்திற்கு பொறுப்பு வாய்ந்த ஒருவனாகவே ஒருத்தியாகவோ தனது கடமைகளையாற்றுவதிலும் நாங்கள் முன்னேறிச் செல்லவேண்டும். உதவி எனப்படுவது கடலில் தத்தளிக்கின்ற ஒரு உயிருக்கு கிடைக்கின்ற ஒரு படகு போன்றதே. தனது வலிமையையும் சக்தியையும் பயன்படுத்தி துடுப்பினை தானே வலித்தால் தான் கரைசேர்வது என்ற பேச்சுக்கே இடமுண்டு.

Give a man a fish and you feed him for a day.Teach a man to fish and you feed him for a lifetime.

”ஒரு மீனை வழங்கினால் ஒருத்தனின் ஒருவேளைப் பசி தான் அடங்கும். அவனுக்கு மீன் பிடிப்பதைக் கற்றுக்கொடு அவனுக்கு நீ ஆயுள் வரைக்கும் ஆகாரம் தருகிறாய்.”

நான் உங்களுக்கு என்னால் முடிந்தளவுக்கு உதவி செய்ய பின்நிற்கப் போவதில்லை. ஆனால் அந்த உதவியின் விளைவாய் நீங்கள் அடையும் முன்னேற்றங்களின் ஒவ்வொரு படிக்கட்டுக்களையும் நான் காணவிழைகின்றேன். நீங்கள் உங்கள் சொந்தக்காலில் உங்களை நிறுவிக்கொள்ள வேண்டும் என்பதே எனது அவா அதுவே பெற்றாராகிய எங்களுக்கும் உங்களுக்கும் பெருமையான விடயம். இதனை நான் கற்றுக்கொண்டது அப்பப்பா-அம்மப்பாவிடமிருந்து. எண்பத்தைந்து வயதை தாண்டிய பின்னாலும் அவர் தான் இன்னும் உழைப்பதை நிறுத்தவேயில்லைப் பாருங்கள்

உங்களுடைய கையிலும் உங்களுடைய தீர்மானத்திலும் தான் உங்கள் வாழ்க்கை எதிர்காலத்தில் அமைய வேண்டும். யாருடைய தயவிலும் உங்கள் வாழ்க்கையை அலைய விடக் கூடாது. நிமிர்ந்து நின்று நீங்கள் யார்க்கும் தலைகுனியாமல் நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்பார்கள் அதுபோல் அச்சமில்லை அச்சமில்லை உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமென்பதில்லையே என்ற மிடுக்கோடும் தன்மானத்தோடும் வாழ வேண்டும்.

இளமை என்பது பசுமரத்தாணி போல் எவற்றையும் இலகுவில் கிரகித்து நினைவில் பதிக்கின்ற காலம். எவற்றையெல்லாம் கற்க வாய்ப்பிருக்கின்றதோ அது கல்வியாயிருக்கலாம் விளையாட்டுதிறனாயிருக்கலாம் தொழிற்தகமையாயிருக்கலாம் இளமையில் கற்றுக்கொள்ளாமல் விட்டுவிட்டால் - இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பார்கள் . வயது கடந்த பின்னர் மிகவும் சிரமமானதொரு விடயம்.

உடற்கூற்றியலின்படி மனிதரின் வயதேகி செல்லும்போது உடற்கலங்கள் இளம் பருவ



காலத்திலுள்ளது போல் செயற்படுவதில்லை. எல்லா இயல்புகளும் அருகிச்செல்கின்றன. அதற்காகத்தான் காலத்தே பயிர்செய் காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்றார்கள்.

ஓவ்வொரு உதவியும் உனக்கொரு ஏடிப்பணி. உதவிகள் முன்னேற்றத்துக்கான முதலீடு.

எனவே துடிப்போடும் மிடுக்கோடும் எவற்றையும் எதிர்கொண்டு போராடி நிமிர்ந்து நிற்க வேண்டும் நீங்கள். சாதிக்கவல்ல இளமைப்பருவத்தை வீணே கழித்துவிட்டு பின்னர் வாழ்நாள் பூராவும் கவலைப்படக்கூடாது. அசையாத மன உறுதியோடும் திடத்தோடும் இலக்குகளோடும் இலட்சியங்களோடும் விடாமுயற்சியோடும் முன்னேறுங்கள்.

போருக்கு முன்னானதும் பின்னானதுமான இன்றைய சூழலில் இளைய தலைமுறையினரிடையே பரவிவருகின்ற தனது சுயசம்பாத்தியத்தை தானே தேட விழையாத சோம்பேறித்தனமான, எதையும் இன்னொருவரின் உழைப்பிலோ கருணையிலோ தயவிலோ நுகரும் ஒரு மனப்பாங்கு குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வளர்ந்து வருகின்றது.

இந்த மனப்பாங்கு சமுதாயத்தில் உழைப்பை மதிக்காத தன்மையை வளர்த்து அடிமையையும் மிடிமையையும் உருவாக்கும்.

நீங்கள் மட்டுமல்லாது யாரும் இந்த தொற்றுநோய்க்குள் விழுந்து விடக்கூடாது. சமூக அக்கறையோடு இளையவர்களாகிய நீங்களும் வளர்ந்தவர்களாகிய பெற்றோரும் தங்கள் இளையவர்களையும் சமூகத்திலுள்ள மற்றைய இளைஞர்களுக்கும் எடுத்தியம்பி வளர்த்துச் செல்ல வேண்டும்.

கடும் உழைப்புக்கும் ஊக்கத்துக்கும் பெயர்போனது யாழ்ப்பாண சமூகம். இதற்கு மிகவும் சிறந்த உதாரணத்துக்கு நீங்கள் அதிக தூரம் போகவேண்டியதில்லை. உங்கள் அப்பப்பா அம்மப்பாவை


பாருங்கள். அவரது ஊக்கமும் உழைப்பும் அருகிலிருக்கின்ற உங்களுக்கு புரியாவிட்டால் வேறு யாரையும் காட்டி அதனை உங்களுக்கு உணரவைக்க முடியாது.

துன்பங்கள் துயரங்கள் வரும்போது தூக்கிவிடுவது மனிதப்பண்பு. அதே போல் தனக்குக் கிடைக்கும் அவ்வாறான உதவி ஒவ்வொன்றையும் படிக்கட்டுகளாக பாவித்து தன்னுடைய சுயவிருத்தியின் மூலம் தன் சொந்தக்காலில் தளராமல் நிற்பதற்கு அடித்தளம் இடுவதற்கும் தலைகுனியாமல் வாழ்வதற்கும் முயற்சி எடுக்க வேண்டும். அதைவிடுத்து எவராவது என்றோ ஒருநாள் எங்களுக்கு படியளப்பார் என்று தங்கள் கல்வியைத் துறப்பதோ அல்லது வெளிநாட்டிற்கு சென்றால் வளங்கள் தானாக வரும் என்று நாட்டில் எந்த முயற்சியையும் கைவிட்டு வெளிநாடு செல்லலாம் என கனவு காணுவதோ பொருத்தமாயிருக்காது.

வெளிநாட்டில் உழைப்பில்லாமல் யாரும் எதையும் சம்பாதித்து விட முடியாது. மிகவும் கடினமான உழைப்பினூடாகவே எவரும் வாழமுடியும். இந்த கடின உழைப்பின் செலவு போக கிடைக்கும் பலமாதச் சேமிப்பு இலங்கை நாணயத்துக்கு அது மாற்றமடையும் போது அது பலமடங்காவதால் தான் வெளிநாட்டு வருவாய் செல்வச் செழிப்பானதாக தெரிகிறது.

வெளிநாட்டுக்கு வந்துவிட்டால் மொழியைக் கற்க வேண்டும். அதன் பின்னால் தொழில் பெறவேண்டும். தொழில் பெறுவது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. மீண்டும் எந்தத் தொழில் செய்ய நாங்கள் நாட்டில் மனவிருப்பின்றி இருந்தோமே அதே தொழில்களை தான் இங்கு செய்ய வேண்டும்.

இபபடி வந்த பலர் பொறுப்புணர்வின்றி உழைத்து வாழாத ரவுடிகளாக ஐரோப்பிய கனடியத் தெருக்களில் அலைகிறார்கள். வெளிநாடெனில் சொகுசு என எண்ணுபவர்கள் இங்கே வந்தபின்னால் கடின உழைப்பின்றி வாழ்க்கை வசதியானதல்ல என்று தங்கள் கனவுகளை கைவிட்டு இப்படியான இலகு பாதைகளில் தவறி விழுகிறார்கள். அவர்களுக்கு உழைப்பினதும் தனது சுயசம்பாத்தியத்தினதும் மகிமையும் தெரியவில்லை. தனது சுய கவுரத்திற்கு வைராக்கியமான மனமும், எதையும் அடைந்தேகுவதற்கு தனது விடாமுயற்சியும் அவசியமானது என்ற பாலபாடம் கிடைக்கப் பெறாமல் ஊர்களிலேயே ஊதாரிப் போக்கில் திரிந்தவர்களாதலால் அவர்களின் முதுகு எங்கும் வளையாது.




பெற்றார் பிள்ளைகள் மேல் எப்படி நம்பிக்கையுடன் அவர்களை வழிநடத்துவார்களோ அதே போல் பிள்ளைகளும் பெற்றாருக்கு தங்களது சொந்தக்காலில் தலைநிமிரும் வரைக்காவது பரஸ்பர நம்பிக்கையுடனும் சொல் நாணயத்துடனும் நடந்தால் மட்டுமே இந்த இருவழி உறவு பெறுமதியை பிள்ளைகளுக்கு வாழ்க்கையில் வழங்கும். உங்களது மகிழ்ச்சியான வாழ்வு ( அம்மா சொல்வது போல் கூழைக்குடித்தாயினும் கஞ்சியைக் குடித்தாயினும் நோய் நொடியின்றி மனமார சீவனுக்கு பொல்லாங்கில்லாமல் வாழ்ந்தால் சந்தோசம்) தான் அவர்கள் தங்கள் உதவி மூலம் உங்களுக்கு அளிக்கும் முதலீடு. ஆந்த முதலீட்டில் முதலும் வட்டியும் உங்களுக்கே சேர்மதி. பெற்றார் வேறெதையும் எதிர்பார்க்க மாட்டார்கள். உங்களது சந்தோசம்தான் அவர்களது வாழ்வு. நீங்கள் அவர்கள் தொய்ந்து வயதால் நொந்தபோது மட்டும் அவர்களை பராமரிக்கும் எண்ணத்தை கடப்பாடாக செய்ய வேண்டும்.

வெளிநாட்டில் வயோதிபர் இல்லங்கள் உண்டு. நான் இங்கு வந்த பின்னால் படித்துக் கொண்டிருந்த அதேவேளை பகுதிநேர வேலையாக வயோதிபர்களை பராமரிக்கும் வேலை செய்தேன். இந்த நவீனமான வசதிகள் கொண்ட வயோதிப இல்லங்களில் கொண்டுவந்து சேர்க்கப்படுவவர்களுக்கு வசதிகளுக்கு எந்தக் குறையுமில்லாதிருந்த போதும் அவர்களுக்கு இருக்கின்ற ஏக்கம் எதுவென்பது இலங்கை போன்ற நாடுகளிலிருந்து வந்த எங்களுக்கு சொல்லாமலே புரியும். அவர்களது, தங்களது பிள்ளைகளின் அருகாமையை இழந்திருக்கின்ற தவிப்பு அவர்களது முகங்களில் ஒட்டப்பட்டிருக்கும். பெருநாள் திருநாள் என்றால் தான் பெரும்பாலான பிள்ளைகள் இந்த வயோதிப இல்லங்களுக்கு வருவார்கள். மற்றும்படி சிலர் மிகவும் ஒழுங்காக வாரத்தில் ஒரு முறை இருமுறையாவது தவறாமல் வந்து தாங்களே அவர்களுக்கு உரிய பணிவ-்டைகளைச் செய்வார்கள்.

இந்த ஊதியம் வழங்கப்படும் சேவையை நிறுவனமயமாக்கி இங்கே ஒவ்வொரு நகர கிராம மன்றுகள் கட்டாய சேவையாக வழங்கி வருகின்றார்கள். ஆனாலும் நிறைகளும் குறைகளும் நிதி ஒதுக்கீட்டில் வெட்டுகளும் நடந்தே வருகின்றது.

இதனை நான் ஏன் கூற வந்தேனென்றால் எங்களது நாட்டில் இயலாத காலத்தில் பெற்றாரை பராமரிப்பது பிள்ளைகளின் பொறுப்பு என்பதாக நாம் உணரவேண்டும்.




தானும் தலைநிமிர்ந்து சமூகத்தில் இயலாத மற்றவர்களுக்கும் பொறுப்பானவர்களாக நீங்கள் உறுதிப்பட வேண்டும்.

இத்தனைகளையும் நாங்கள் சிரமமெடுத்து மனதார செய்வோமாகில் எந்த வேலைகளும் பழுவாக தெரியாது மன மகிழ்வாகத்தான் தெரியும். வாழ்க்கை என்பது நெடுகிலும் ஒரு போராட்டம். அந்தப் போராட்டமே மனமகிழ்வினை தரும். துவண்டு விடாது மனம் சோர்ந்து விடாது சாதிப்பது, எவற்றையும் வெல்வது தான் வாழ்க்கை. உன்னால் முடியும் தம்பி என்பார்கள்.

தமிழ் சினிமா வாழ்க்கை உங்கள் இதயங்களில் எந்தக் கனவையும் விதைக்க இடம் வைத்துவிடாதீர்கள். இளைய வயதினரை இழுத்து விழுத்தும் பல பொறிகள் அங்கு நீங்கள் அறியாமலே பரவி விடப்பட்டிருக்கின்றது.

சினிமா என்பது ஒரு கனவுத் தொழிற்சாலை. நிஜவுலக வாழ்வுக்கும் சினிமா உங்கள் மனதில் உள்புகுத்தும் கனவுக்கும் துளியளவும் சம்பந்தமில்லை என்பதை மட்டும் புரிந்து கொள்ளுங்கள்.

சினிமாவுக்கும் தொலைக்காட்சிக்கும் உங்கள் மொத்த நேரத்தில் நீங்கள் தரக்கூடிய நேரம் ஒரு சதவீதம் கூட ஆகக் கூடாது.

எத்தனையோ அறிவுபூர்வமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் உண்டு தான். ஆனால் அவை துரதிஸ்டவசமாக வேற்றுமொழியில் தான் கிடைக்கின்றன. தமிழ்மொழியிலான தொலைக்காட்சியோ சினிமாவை விட்டு இன்னும் விலத்தியபாடில்லை. தமிழ் சினிமாவோ இன்னும் யதார்த்த வாழ்வினையும் நிஜமான நடப்புகளையும் கொண்டு தயாரிக்கபடுவதில்லை.

நல்ல புத்தகங்களை தேடி வாசிப்பது, எந்தமொழியாயினும் அதனை கற்றுத் தேர்வது பாண்டித்தியம் பெறுவது, அத்தோடு கற்கும் அந்த இரண்டாம மொழியில் வெறும் அடிப்படையறிவை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல் அந்த மொழியில் எழுதப்பட்ட நூல்களையும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவது என பன்மொழித் திறமையை வளர்ப்பது என்பது சினிமாவுக்கு செலவழிக்கும் நேரத்தைவிடச் மிகவும் பயனுள்ளது. பிரயோசனமானது. நாங்கள் கற்ற காலங்களை விட உங்களுக்கு இன்றைக்கு உலகமொழிகள் அறிவுகள் எத்தொலைவிலிருந்தாலும் உங்கள் காலடிக்கு வந்து சேரும் விதத்தில் இன்று இணைய வசதிகள் இருக்கின்றன. ஆனால் எங்களது உற்சாகத்தை நீங்கள் பிரதிபண்ணுவீர்களாயின் எங்களை விட பலமடங்கு வேகத்தில் நீங்கள் கற்றுக் கொள்ளும் வசதி இன்று உங்களுக்கு இன்றைய தொழிற்தொடர்பு தொழில் நுட்பம் வழங்கியிருக்கின்றது. இது உங்களுக்கு ஒரு வரப்பிரசாதமல்லவா?

உங்களுக்கு இருக்கின்ற நேரத்தை திட்டமிடுங்கள் அதனை கூறு போடுங்கள். முக்கியமானவற்றை முதன்மைப்படுத்தி உரிய போதுமானளவு நேரத்தை அவற்றுக்கு ஒதுக்குங்கள். உடற்பயிற்சிக்கும் விளையாட்டுக்கும் நேரம் ஒதுக்குங்கள். இசைக்கும் கலைக்கும் ஒதுக்குங்கள். இசை வாத்தியங்கள் உங்களுக்கு மட்டுமல்லாது உங்களைச் சூழவுள்ளவர்களுக்கும் இனிமையைத் தரும். மிகுதி நேரம் கிடைத்தால் அதனையும் சரியான வழியில் பயன்படுத்தப் பழகுங்கள். சினிமாவுக்கு என்னைப் பொறுத்தவரை மாதத்தில் ஒரு தடவையோ வருடத்தில சில தடவைகளோ ஒதுக்கலாம்.

வீட்டில் பெரியவர்கள், வேறு முக்கியமான அலுவல்கள் இல்லாமல் ஓய்வுநேரத்தை சினிமாவில் போக்கிக் கழிக்க விரும்பும் வளர்ந்தவர்கள் இருந்தால் அவர்களோடு நீங்களும் சேர்ந்து சினிமாவில் பொழுதைக் கழிக்காதீர்கள். அது எந்த அறிவையோ வாழ்க்கைக்கு எந்த அடிப்படையையோ உங்களுக்கு தேடித் தராது.

பிள்ளைகளே நீங்கள் நாளைய எங்கள் வருங்காலப் பயிர்கள். நீங்கள் செழித்து வளர்ந்து பூரிப்போடு தனக்கும் சமுதாயத்துக்குமாக வாழ்வது தான் பெற்றாருக்கு நீங்கள் தரக்கூடிய மிக உச்சமான மகிழ்ச்சி. அது மட்டுமல்ல அதுவே தான் உங்களுக்கும் நாளைய உங்கள் சொந்த மகிழ்ச்சிக்கு நீங்கள் நீங்கள் இடக்கூடிய அடிப்படை முயற்சி.

தோல்விகள் துன்பங்கள் வழிநெடுக உண்டு. அது தன்னாலும் வரலாம் பிறராலும் வரலாம். எல்லாவற்றையும் தாண்டி துவண்டுவிடாமல் அடுத்தபடிக்கு செல்வதும் அவற்றை வெல்வதும் மன உறுதியோடு மீண்டும் அடுத்த அடியெடுத்து முன்னேறுவதும் போராட்டம். அதுவே வாழ்க்கை.

உன்னால் முடிந்ததை சாதிக்கப் பழகு.சோம்பேறியாய் இருந்துவிட்டு எவரும் எதுவும் எனக்கு உதவி செய்யவில்லை என்று மற்றவர் மேல் பழி சுமத்தி மற்றவர்களின் இரக்கத்தில் வாழப் பழகிக் கொள்ளாதே. அது தன்மானமாக தலைநிமிர்ந்து வாழும் உன் எண்ணத்துக்கு ஈறு தரும் என்பதைப் புரிந்து கொள்.

நானே என் முயற்சியால் உயர்ந்தேன் என்று மார்தட்டு. உதவி என்பது உனக்கு படிக்கட்டுத்தான். காலடிகளை மேலே எடுத்து வைப்பது நீயே தான். உதவி என்பது உனக்கு பாயல்ல படுத்துத் தூங்குவதற்கு. படுத்துத் தூங்குபவனுக்கு உதவி செய்வது அவனை மேலும் பாழடிப்பதாவே முடியும். எனவே சாதித்துக் காட்டுங்கள். தானே உதவி தேடி வரும். அது புலமைப்பரிசிலாக வரலாம். தனிநபரிடமிருந்து கூட வரலாம். தனிநபர்களிடமிருந்து வரும் உதவிகளை அது உங்கள் சுயாதீனத்துக்கும் சுயகவுரத்துக்கும் எந்த வகையிலும் உங்கள் சொந்த தீர்மானங்களுக்கும் சிந்தனைக்கும் கட்டுப்பாடு வைக்காத வகையில் மட்டும் அதனை சீர் தூக்கிப்பாருங்கள். உதவிகளுக்காகவும் முன்னேற்றத்துக் காகவும் உங்களை எங்கும் அடகு வைக்காதீர்கள்.

அது காதல் ‘ரூபத்திலோ கல்யாண ரூபத்திலோ கூட வரலாம். தெரிந்தவர் அறிந்தவர் பெரியவர் என்ற அந்தஸ்து ரூபத்திலும் வரலாம். உன்னை கீழ்ப்படுத்தி தாழ்மைப்படுத்தி எந்த உறவோ உதவியோ வந்தால் துரத்தியடியுங்கள். அவர்கள் தீய நோக்குடன் குறுக்கே நின்றால் உங்களுக்கு தனிப்பட குறிப்பிட்ட வழியில் பாதகமாயிருப்பினும் அத்தீயவர்களை தூக்கியெறியுங்க்ள். அவர்களை அம்பலத்துக்கு கொண்டு வாருங்கள். அவர்கள் உறவாயிருப்பினும் நண்பர்கள் போல் நடிப்பவர்களாவிருப்பினும் அறிவாண்மையால் தங்களை மற்றவர்களை விட மேலானவர்களாக கருதுபவர்களாகவும் இருக்கலாம், எவராயினும் நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே.

அதே போல் மனமறியாமல் பக்குவமில்லாமல் முதிர்ச்சியடையாமல் நீங்கள் தவறுகள் இழைப்பின் அத்தவறுகளுக்கு மனம் வருந்துங்கள். உங்களை திருத்திக் கொள்வதுடன் நீங்கள் தவறிழைத்திருப்பது உங்களை விட வயதில் அறிவில் சிறியவராயிருப்பினும் அவர்களிடம் மனவுணர்வுடன் மன்னிப்பு கேட்கவும் தவறாதீர்கள். மன்னிப்பு என்பது உண்மையில் தவறை தவறென்று உண்மையிலேயே உணர்ந்தவர்களுக்கு மட்டுமே என்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள். கற்றுக் கொள்ளுங்கள் கற்றுக் கொடுங்கள். நேரம் பொன்னானது. போனால் திரும்பி வராதது. இளமையில் கல்வி சிலையில் எழுத்து. கற்றது கையளவு கல்லாதது உலகளவு. மனிதப் பாங்கும் பண்பும் மற்றெல்லாத் தகுதிகளை விடவும் மேலானது. இன்னொருத்தரின் அழிவில் தன்னுடைய செழிப்பை யாரும் தேடக் கூடாது.

- இரணியன்

# மட்டு.மாவட்டம் மண்முனைப்பற்றில் மதுபானசாலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்றில் புதிதாக அமைக்கப்படவுள்ள மதுபான சாலைக்கான அனுமதியை இரத்துச்செய்யுமாறு கோரி மட்டக்களப்பில் நேற்றுப் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட வேடர் குடியிருப்பு, புதுக்குடியிருப்பு, கிரான்குளம், காங்கயனோடை, தாழங்குடா உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மட்டக்களப்பு காந்தி சிலைக்கு முன்பாகவிருந்து பேரணியாகச் சென்று மட்டக்களப்பு கச்சேரிக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த மதுபானசாலைக்கான அனு மதியை இரத்துச்செய்யுமாறு கோரும் மகஜர் ஒன்றையும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் கையளித்தனர்.

ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவில் ஏற்கெனவே 6 மதுபானசாலைகள் இயங்குகின்ற நிலையில், 7ஆவது மதுபான சாலை மண்முனைப்பற்றில் திறக்கப்படவுள்ளது. இந்த மதுபான சாலைக்கான அனுமதி இரத்துச் செய்யப்பட வேண்டும் எனவும் இம்மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பெண்கள், மதுபான சாலைகள் அதிகரிக்க அதிகரிக்க தங்களுக்கான பிரச்சினைகள் நாளுக்குநாள் அதிகரிக்கின்றது. இதனால் பிள்ளைகளின் படிப்பு வீணாகுகின்றன. குடும்ப வன்முறைகள் ஏற்படுகின்றன எனவும் தெரிவித்தனர்.




"7ஆவது மதுபானசாலை வேண்டாம்", "மதுபானசாலைகளின் மாநகரமா மண்முனைப் பற்றுப் பிரதேசம்", "நிறுத்து அனு மதியை" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

## உலக வங்கியின் பணிப்பாளர் இலங்கை வருகின்றார்

உலக வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் ஸ்ரீமுலியாணி இந்திராவதி நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு இன்று வியாழக்கிழமை விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 19 திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் இவர் இங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களை பார்வையிடவுள்ளதுடன் நாட்டின் முன்னேற்றத்திற்கு இந்த அபிவிருத்தி நிறுவனம் எவ்வாறு கூடுதலான ஒத்துழைப்புகளை வழங்கலாம் என்பது தொடர்பிலும் ஆராயவிருக்கின்றார்.

இலங்கை அரசாங்கத்திற்கும் உலக வங்கிக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்துவது தொடர்பில் இவர் தனது விஜயத்தின் போது முக்கிய கவனம் செலுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மக்களுக்கு தேவையான தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்களை அவர் உருவாக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அதிவேக நெடுஞ்சாலையை உகண்டா ஜனாதிபதி பார்வை

உகண்டா ஜனாதிபதி யோவேறி கபுடா முஷவேனி தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்து அந்த நெடுஞ்சாலையை பார்வையிட்டுள்ளார்.

நான்கு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள உகண்டா ஜனாதிபதியும் அவரது பாரியாரும் அந்நாட்டு அமைச்சருமான ஜெனட் கடகா முஸாமி ஆகிய இருவருமே தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்றுப் பயணித்துள்ளனர்.

கொட்டாவ பிரதான நுழைவாயின் ஊடாக அதிவேக நெடுஞ்சாலைக்குள் பிரவேசித்த இவ்விருவரும் களனிகம வரை பயணித்ததாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த முதலாவது வெளிநாட்டுத் தலைவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## உகண்டாவுடன் ஐந்து ஒப்பந்தங்கள் கைச்சாத்து

- தொழிற் பயிற்சி
- பொருளாதாரம், வணிகம், தொழில்நுட்பம்
- உல்லாசப் பயணத்துறை
- அரசியல் ஆலோசனை
- கலாசாரத்துறை

இலங்கை மற்றும் உகண்டா அரசாங்கங்களுக்கு இடையில் ஐந்து ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு, நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை அலரி மாளிகையில் இரு நாடுகளினதும் ஜனாதிபதிகள் முன்னிலையில் இடம்பெற்றது.

இலங்கை - உகண்டாவுக்கும் இடையிலான நட்புறவை மேம்படுத்தும் நோக்கில் உகண்டாவில் தொழிற்பயிற்சி மத்திய நிலையமொன்றை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தில் சர்வதேச நிதி முதலீட்டு சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகமவும் உகண்டா ஜனாதிபதியின் பாரியாரும் அந்நாட்டு அமைச்சருமான ஜெனட் கடகா முஸாமி ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இரு நாட்டு பொருளாதார, வணிக மற்றும் தொழில்நுட்ப ஒப்பந்தத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் உகண்டா ஜனாதிபதியின் பாரியாரும் அந்நாட்டு அமைச்சருமான ஜெனட் கடகா முஸாமி ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

உல்லாசப் பயணத்துறை தொடர்பான ஒப்பந்தமொன்றும் இரு நாடுகளினதும் அரசியல் ஆலோசனை விவகாரம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் இதன்போது கைச்சாத்திடப்பட்டன.

இறுதியாக, கலாசாரத்துறை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கலாசாரத்துறை அமைச்சர் டி.பீ.ஏக்கநாயக்க மற்றும் உகண்டா ஜனாதிபதியின் பாரியாரும் அந்நாட்டு அமைச்சருமான ஜெனட் கடகா முஸாமி ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

## க.பொ.த.சாதாரண தர வழிகாட்டல் கருத்தரங்கு

(மருதனார்மடம்)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு 'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பினால் 15ஆம், 16ஆம் திகதிகளில் கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மருதனார்மடம், இராமநாதன் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றில் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

மாணவர்களுக்கு இலவசமாக வினாத்தாள்களும் வழங்க இருக்கின்றனர். பரீட்சையை எதிர்பார்க்கும் மாணவர்கள் பங்குபற்றிப் பயன்பெற்றுக்கொள்ளலாம்.



யாழ்ப்பாணம்-அராலி வீதியிலுள்ள அல் அஸ்ஹார் முன்பள்ளியின் வருடாந்தக் கண்காட்சி ஞாயிறு மாலை 'இணையும் கரங்கள்' சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட யாழ்.உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் ஆரம்பக் கல்விப் பொறுப்பதிகாரி ஜெயா தம்பையா, யாழ்-கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் தலைவர் கே.எம்.நிலாம் ஆகியோரையும், சிறார்களையும், பெற்றோரையும் படங்களில் காணலாம். (படங்கள் - மீரான்)

# வானலை நாதம்

# சமூக வானொலிகள் ஏன் தேவை?

(கடந்தவாரத் தொடர்ச்சி)

**வானொலி எனும் ஊடகம்:**
மக்களுடைய மனப்பாங்குகளில் மிகவும் துல்லியமாகவும் துரித மாகவும் ஏற்படுத்தக்கூடிய ஓர் ஊடகமே வானொலி. அது அயலவன், தேசம் என்ற எல்லைகளைத் தாண்டி முழு உலகினையும் நொடிப்பொழுதில் சிந்தனையின் முன்நிறுத்தும் சாதனமும் கூட. இதன் செயற்பாடும் பணியும் காலத்திற்குக் காலம் மாறி வருகின்றது. தகவல் தொழில் நுட்பம் மிகவும் வேகமாக வளர்ந்துவரும் இன்றைய சூழ்நிலையில் தகவலை மிகவும் வேகமாகப் பரிமாறிக்கொள்ள வானொலி பலவழிகளிலும் பயன்படுத்தப்படுகின்றது.

வானொலி தொடர்பாக Kevin Howley jdJ Wireless World: Global Perspectives on Community Radio (Issue No.10- February 2005- Media Communities: Local Voices) எனும் கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "தூர இடங்களில் இடம்பெறும் நிகழ்வுகளில் பங்கேற்பதற்கும், இசையைக் கேட்பதற்கும், உலகெங்கிலுமிருந்து குரல்களைச் செவிமடுப்பதற்கும் நேயர்களை அழைப்பதன் ஊடாக நமது உலகினை இன்னும் விஸ்தீரணமுள்ளதாக ஆக்கும் அதே நேரம், வானொலி உலகை மிகவும் சிறியதாக மாற்றிவிடுகிறது. தூரயிருப்பவர்களை மிகவும் நெருங்கச் செய்கிறது. வெளிநாட்டை மிகவும் அண்மையில் இருக்கும் நாடாகக் காட்டுகிறது. மாற்றுக் கலாசாரத்தை மிகவும் நெருக்கமாக்கித் தருகின்றது. சிலநேரம் இவற்றுடன் மிக நெருக்கமாக தொடர்பினையும் ஏற்படுத்துகின்றது". இது வானொலி எவ்வளவு துரிதமாகத் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஊடகம் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

வானொலி பின்வரும் நன்மைகளைக் கொண்டிருப்பதால் அதனை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மிக இலகுவாகப் பயன்படுத்த முடியும் என்பதை தனது Radio- By the Community, for the Community எனும் கட்டுரையில் கலாநிதி அருண் ஆரம் பின்வருமாறு குறிப்பிடுவார்.

"வானொலி சாதாரண விவசாயி ஒருவராலும் வாங்கிப் பாவிக்க முடியும். வானொலிப் பெட்டியை எந்த இடத்திற்கும் கொண்டு செல்லலாம். வேறு வேலைகளைச் செய்து கோண்டே வானொலியைச் செவிமடுக்கலாம். அத்துடன், பத்திரிகை, தொலைக்காட்சி, திரைப்படம் என்பவற்றைப் பார்ப் பதற்கு அமர வேண்டும். வானொலியை கேட்க தனியாக அமரவேண்டியதில்லை. தனியான இடமும் அவசியமில்லை.

வானொலி நிலையம் ஒன்றைக் குறைந்த விலையில் நிறுவமுடியும். வானொலி மிகவும் சௌகரியமான ஊடகம். இணையத் தளம் மற்றும் பத்திரிகை ஆகியவற்றை வாசிப்பவர்கள் வாசிப்பாற்றல் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனால், வானொலியைச் செவிமடுப் பதற்கு இத்தகைய நியதிகள் அவசியமில்லை. தொலைக்காட்சியைப் போன்று கவர்ச்சியோ தத்துவமோ இதனுடன் தொடர்புபட்டிருப்பதில்லை". (www. Portalcomunicacion. com 311.p.1).

பிரதானநிலை ஊடகங்களின் நிலை பொதுவான நோக்கில் இலங்கை போன்ற நாடுகளின் பிரதான நிலை வானொலிகள் (Mainstream Radio) இரண்டு பிரதான பண்புகளைக் கொண்டிருக்கின்றன. ஒன்று, ஒருவருடைய, ஒரு குழுவினுடைய ஒரு அரசியல் கட்சியினுடைய அல்லது ஒரு சமூகத்தினுடைய இருப்புக்குத் துணைபோகும் ஒரு சமூகக் கருவியாகச் செயற்படுதல். இரண்டாவது, சமூகக் கட்டமைப்பின் (Social Structure) மேற்பகுதியில் (Surfers Level) உள்ள விடயங்களுக்கு மாத்திரம் அதிக அழுத்தம் கொடுத்தல். இவ்விரண்டு விடயங்களும் மிக ஆழமான ஆய்வினை வேண்டிநிற்கின்றன.


பிரதானநிலை வானொலி ஊடகங்களில்-விளம்பரம், செய்தி, நேரடி ஒலிபரப்புகள், சஞ்சிகை நிகழ்ச்சிகள், அபிவிருத்தி நிகழ்ச்சிகள், சமய பண்பாட்டு நிகழ்ச்சிகள் என்று எதனை எடுத்துக் கொண்டாலும் ஒரு தலைப்பட்சமாக ஒரு பிரிவினரை திருப்திப் படுத்தும் நோக்கிலேயே செயற்படுகின்றன. இலங்கை ஒலிபரப்புத் துறையில் இதற்கான பல சான்றுகளைக் காணமுடியும். மக்களின் அவதானத்தை வென்றெடுப்பதற்காக அரசாங்கம் ஒன்றின் நடவடிக்கைகளைச் சீண்டிப்பார்த்தல், கேள்விக்குறியாக்குதல், பொதுமக்களின் ஏகோபித்த நல்லபிப்பிராயத்தை பெறுவதற்காக நாட்டின் பொதுநலனில் அக்கறை கொண்டவர்கள் என்பதைக் காட்டுதல் என்பன இன்றைய பிரதான நிலை வானொலி நிகழ்ச்சிகளின் பொதுத் தன்மையாகி வருகின்றது. பிரதானநிலை வானொலி ஊடகங்களை மிகவும் ஆழமாக சமூக அலசலுக்கு உட்படுத்தும் போது இவற்றை இலகுவாக அறிந்துகொள்ள முடியும்.

இலங்கையைப் பொறுத்தவரை அரசியல், விளையாட்டு, சினிமா மற்றும் விளம்பரங்கள் என்பனவே இன்றைய பிரதானநிலை வானொலிகளின் நிகழ்ச்சிகளில் உள்ளடங்கல்களாக இருக்கின்றன. இவை உண்மையான சமூகமொன்றின் வலுவாக்கத்தில் பங்களிப்புச் செய்யும் வாய்ப்பினை முழுமையாகக் கொண்டிருப்பதில்லை. நடிகர்களின் வரலாறு, அவர்களின் பிறந்ததினச் சிறப்பு நிகழ்ச்சிகள், அவர்கள் நடித்த திரைப் படங்களில் ஒலித்த பாடல்கள், ஒரு குறிப்பிட்ட இசையமைப்பாளரின் பாடல்கள், ஒரு குறிப்பிட்ட ராகத்தில் அமைந்த பாடல்கள், குறிப்பிட்ட உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கும் பாடல்கள் மற்றும் ஒரே காலத்தில் வெளியான பாடல்கள் என்று சினிமாவையும் அதுசார்ந்த விடயங்களையம் முடிந்தவரை ஒலிபரப்புதல் தமிழ் மொழியில் இயங்கும் வானொலிகளின் பிரதான குணாம்சங்களாக இருக்கின்றன. பாடல்களைப் பற்றி அல்லது ஒரு திரைப்படத்தைப் பற்றிப் பேசும்போதுகூட ஒரு தனிப்பட்ட நடிகரை, நடிகையை அல்லது இசையமைப்பாளரை மையப்படுத்தி அவரை ஒரு கதாநாயக னாக காட்டும் தோரணையிலேயே அவை அமைகின்றன. இதே விடயத்தையே ஒரு புதிய தகவலாக அறிவார்ந்த விடயமாக மாற்றிக்கொள்ளும் போக்கு பெரும்பாலும் இல்லை.

குறிப்பிட்ட ஒரு தலைப்பினைக் கொடுத்து நேயர்களைப் பேச வைக்கும் வானொலி நிகழ்ச்சிகளில் கூட, பொதுமக்களின் கருத்துக்களைக் கணித்தல், அவற்றில் புதிய விடயங்களை நேயர்களுடன் பகிர்ந்துகொள்ளல், அறிவார்ந்த விடயங்கள் பற்றி பொது அரங்குகளை அமைத்தல், பன்மாதிரியான கருத்துக்களுக்கு இடமளித்தல் என்பனவற்றுக்கு வாய்ப்பில்லை. வானொலியைச் செவிமடுக்கும் பொதுமக்கள் யாதொன்றும் அறியாதவர்கள் என்றே அநேகமான வானொலி ஒலிபரப்பாளர்கள் நினைக்கின்றார்கள். இலங்கையில் சகல பிரதானநிலை வானொலிகளை நிறுத்தினாலும், இலங்கை தமிழ்பேசும் மக்களின் வாழ்க்கையில் ஓர் இம்மியளவும் பாதிப்பு ஏற்படாது.

(மிகுதி அடுத்தவாரம்)

**- எம்.சீ.ரஸ்மின்**
**(சமூக வானொலி- மனித வலுவாக்கத்திற்கான ஊடகம்)**



# வானொலியில் நேர்முக வர்ணனை

வானொலி நேர்முக வர்ணனை யாளர் களை மூன்று வகை யாகப் பிரிக்கலாம்.

முதலாவது வகை நேர்முக வர்ணனையாளர்கள் நிறைய 'ஹோம் வேர்க்' செய்பவர்கள். இவர்கள் நேர்முக வர்ணனைக்குச் செல்லும் முன்னர் நிறையத் தகவல்களைச் சேகரித்து வைத்துக் கொள்வார்கள். தாம் சேகரிக்கும் தகவல்களையெல்லாம். பக்கம் பக்கமாக எழுதியும் வைத்துக் கொள்பவர்கள். இதை 'PADDING MATERIALS' என்று ஆங்கிலத்தில் கூறுவோம். அதாவது நேர்முக வர்ணனையின்போது சொல்வதற்கு ஏதும் இல்லாமல் திண்டாடும் நிலை ஏற்படும் வேளைகளில் இந்தத் தகவல்கள் கைகொடுத்து உதவும். ஆனால் இவர்கள், தாம் எழுதிக் கொண்டு வருவதையே வாசித்து அதையே நேர்முக வர்ணனையாக்கி விடுவார்கள்.

இரண்டாவது ரகம், எந்தவித 'ஹோம் வேர்க்'கும் செய்யாது, எந்தத் தகவல்களும் சேகரிக்காது, அங்கு நடப்பவற்றை மாத்திரம் கூறுபவர்கள். சொல்வதற்கு எதுவும் இல்லாத வேளைகளில், அதாவது நிகழ்ச்சிகள் ஏதும் நடக்காத வேளைகளில் சொல்வதையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டும், நடந்து முடிந்த நிகழ்ச்சிகளை மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்திக் கொண்டும் இருப் பவர்கள் இவர்கள் தான்.

மூன்றாவது வகை நேர்முக வர்ணனையாளர்கள், ஓரளவு 'ஹோம் வேர்க்' செய்து கிடைக்கும் தக வல்களை, அப்படியே எழுதி வைத்து வாசிக்காமல், ஓரிரு வார்த்தைகளில் குறிப்பெடுத்துக் கொண்டு நேர்முக வர்ணனையின் போது ஆங்காங்கே தாம் சேகரித்த தகவல்களையும் சிறிது சேர்த்துக் கொள்பவர்கள். இவர்களே சிறந்த நேர்முக வர்ணனையாளர்கள்.

எழுதிக் கொண்டு போய் வாசிக்கும் பழக்கமுடைய நேர்முகவர் ணனையாளர்கள் சில வேளைக ளில் தாம் எழுதிக் கொண்டு வந்ததை வாசிப்பதில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கையில், தமக்கு முன்னால் நிகழ்ந்து கொண்டிருக்கும் முக்கிய நிகழ்ச் சிகளை கோட்டை விட்டு விடு வார்கள். அத்துடன் ஒருகையில் ஒலிவாங்கியும் மறுகையில் கற்கைக் கடதாசிகளுமாக நேர்முக வர்ணனை செய்வது மிகவும் கஷ்டமான காரியம்.

அத்துடன் நேர்முக வர்ணனையாளர்களுக்கு மொழிவளம் மிக முக்கியமானதொன்றாகும். ஏனென்றால் கண்ணால் காண்பதை வார்த்தைகளால் படம்பிடித்து உடனுக்குடன் சொல்கின்ற ஆற்றல் மொழி வளம் இல்லாதவர்களுக்குக் கைகூடாததொன்று.

எழுத்தாளர்களுக்கு, தாம் எழுதியவற்றை மீண்டுமொரு முறை வாசித்து சிலதிருத்தங்களைச் சில திருத்தங்களைச் செய்வதற்கு வாய்ப்புண்டு. ஆனால் நேர்முக வர்ணனையாளர்களுக்கு இந்தச் சலுகை கிடையாது. எனவேதான் எல்லா வானொலி அறிவிப்பாளர்டிகளும் தயாரிப்பாளர்களும் சிறந்த நேர்முக வர்ணனையாளர்களாக மிளிர்வதில்லை.

**- ஜோர்ஜ் சந்திரசேகரன்**
**('வானொலியும் நானும்' நூலிலிருந்து).**

## இலங்கை வானொலியின் பண்பலை ஒலிபரப்புகள்



இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ள வானொலி அலைவரிசை மீளமைப்பு திட்டத்தின்படி இலங்கை வானொலியின் மும்மொழிச் சேவைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள அலைவரிசை விபரங்கள் வருமாறு:

**தமிழ் தேசிய சேவை**
102.1, 102.3
**ஆங்கில தேசிய சேவை**
97.4, 97.6
**சிங்கள தேசிய சேவை**
91.7, 91.9
**தென்றல் சேவை**
104.7, 104.9
**சிங்கள வர்த்தக சேவை**
94.3, 94.5
**சிற்றி எப்.எம். சேவை**
89.6, 89.8
**விதுல/விளையாட்டு சேவை:**
107.3, 107.5

**பிராந்திய சேவைகள்**

| | |
|---|---|
| யாழ் எப்.எம்.: | 90.1 |
| பிறை எப்.எம்: | 90.1 |
| ருஹுணு சேவை: | 107.3 |
| | 107.5 |
| ரஜரட்ட சேவை: | 107.3 |
| ஊவா சேவை: | 107.3 |
| வயம்ப சேவை: | 90.1 |

**முன்மாதிரி** பாக்ஸர் முழுத் தெம்புடனிருந்தால், சில உதைக ளிலேயே அந்த வண்டியை நொறுக் கியிருக்கும்.

நெருப்புப் பெட்டியை நசுக்குவது போல அது வண்டியை நசுக்கியி ருக்கும். ஆனால், பாவம்! அதன் கால்களிலே இப்போது பலமே யில்லை. சில நிமிஷங்க ளில் வண்டி நகர நகர பாக்ஸரின் உதை களின் சப்தம் கூடக் குறைந்து விட்டது. மிருகங்கள் என்ன செய்வது என்றறியாமல் திகைத்தன.

ஒன்றும் தோன்றாமல் போகவே, விலங்குகள் வண்டியை இழுத்துச் செல்லும் குதிரைகளைக் கெஞ்சின. தோழர்களே! தோழர்களே! உங் கள் சகோதரன் அது. எமலோகத் துக்கு அதை அழைத்துக் கொண்டு போகாதீர்கள்! என்று கத்தின. ஆனால் வண்டியை இழுத்துச் செல்லும் குதிரைகள் முட்டாள்கள்! கல்வி யறிவில்லாத மிருகங்கள்.

நடந்தது என்ன என்பதை அறியா தபடி வேகமாகப் போய்க்கொண்டி ருந்தன. காதுகளை உயர்த்திக் கொண்டு இன்னும் வேகமாக ஓடின. அதற்கப்புறம் பாக்ஸரின் முகம் ஜன்னலில் தெரியவில்லை. வெளிக் கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டால் வண்டி தொடர்ந்து போக




முடியாதே என்று ஒரு மிருகத் துக்கு யோசனை தோன்றியது.

நல்ல யோசனைதான். ஆனால் கால தாமதமாகிவிட்டது. மிருகங் கள் போய்க் கதவைச் சாத்துவ தற்குமுன் வண்டி கதவைத் தாண் டிப் போய்விட்டது. பாக்ஸரை மீண் டும் யாரும் பார்க்கவில்லை. வில் லிங்டன் ஆஸ்பத்திரியில் பாக்ஸர் இறந்துவிட்டதாக மூன்று நாட்க ளுக்குப் பிறகு அறிவிக்கப்பட்டது. குதிரைக்கு எவ்வளவு சிறப்பாக வைத்தியம் செய்யமுடியுமோ அவ் வளவு செய்தும் பாக்ஸர் பிழைக கவில்லை என்றும் அறிவிக்கப்பட் டது. ஸ்க்வீலர் பன்றி வந்து இந்த விஷயத்தை எல்லா விலங்குக ளுக்கும் தெரிவித்தது. பாக்ஸரின் கடைசி நேரத்தில்தான் அதனுடன் இருந்ததாக அது சொல்லிற்று.

"அந்தக் காட்சியை என்னவென் றுதான் சொல்வேன்? அது என் மனத்தை உருக்கிவிட்டது"என்றது ஸ்க்வீலர். பிறகு ஒரு முன்னங் காலைத் தூக்கிக் கண்ணில் துளிர்த்த நீரைத் துடைத்துக்கொண்டது. 'கடைசியில் அது உயிர்விடும் போது நான் பக்கத்தில் இருந்தேன். கடைசி மூச்சுடன், பேசமுடியாமல் திணறிக்கொண்டே அது "காற்றா டிக் கட்டிடம் முடியுமுன் போகி றேனே" என்று சொல்லிக் கண் ணீர் வடித்தது. 'தோழர்களே முன் னேறுங்கள்! விலங்குப் பண்ணை நீடூழி வாழ்க! தோழர் நெப்போலி யன் சொல்வதே சரி' என்று கூறி விட்டு உயிர் துறந்தது அது. இது தான் பாக்ஸரின் கடைசி வார்த் தைகள்.

இதைச் சொல்லிவிட்டு நடுவே கொஞ்சம் தயங்கியது ஸ்க்வீலர் பன்றி, அதனுடைய சிறிய கண் கள் அங்குமிங்கும் பாய்ந்து சந் தேகத்துடன் பார்த்தன. கொஞ்ச நேரம் மௌனமாக இருந்துவிட்டுத் தொடர்ந்தது அது. பாக்ஸரை ஆஸ் பத்திரிக்கு எடுத்துச் செல்லும்போது ஒரு அசட்டுத்தனமான வதந்தி., விஷமத்தனமான வதந்தி உலாவி யதாக ஸ்க்வீலரின் காதில் விழுந் ததால், சில மிருகங்கள் வண்டி யின்மேல்,

"குதிரை கொல்லி" என்று எழுதி யிருந்ததைத் தவறுதலாக நினைத்துக் கொண்டுவிட்டன. பாக்ஸைக் குதிரை கொல்லியிடம்தான் கொண்டு போகி றார்கள் என்று அவை எண்ணி விட்டன. **(நாளை)**

## முல்லா அணைத்த நெருப்பு

ஒரு தடவை முல்லா வியாபார விஷயமாக வெளியூர் சென்றிருந்தார்

வியாபார அலுவல்கள் முடிந்து பிறகு அன்று இரவுப் பொழுதைக் கழிப்பதற்காக ஒரு விடுதியில் தங்கினார். மிகவும் சாதாரணமாக உடையணிந்திருந்த முல்லாவை விடுதி வேலைக்காரர்கள் கொஞ்சமும் மதிக்கவில்லை. சரியானபடி உபசரிக்கவில்லை.

இரவு திடீரென அவருக்குத் தண்ணீர் தாகம் எடுத்தது.

வேலைக்காரர்களைக் கூப்பிட்டு தமக்குக் குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்று கேட்டார். வேலைக்காரர்களோ அவரைக் கொஞ்சமும் லட்சியம் செய்யவில்லை. கும்பலாக அமர்ந்து கதை பேசிக் கொண்டிருந்தனர்.


முல்லாவுக்கோ நாவறட்சி அதிகமாக இருந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தார். அவருக்கு யோசனையொன்று தோன்றியது.

திடீரென் அவர் "நெருப்பு! - நெருப்பு! நெருப்பு பற்றிக் கொண்டு விட்டது" எனக் கூக்குரல் போட்டார்.

வேலைக்காரர்கள் பதறியடித்துக் கொண்டு ஆளுக்கு ஒரு குடத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு ஓடி வந்தார்கள்.

முல்லாவைப் பார்த்து "எங்கே தீப்பற்றிக் கொண்டது?" என்று பரபரப்புடன் கேட்டார்கள். முல்லா சாவதானமாக ஒரு குவளையை எடுத்து அவர்கள் கொண்டு வந்திருந்த குடம் ஒன்றிலிருந்து நீரை எடுத்து வயிறாரக் குடித்தார். அவர் தாகம் அடங்கியது.

"நெருப்பு பற்றிக் கொண்டதாகச் சொன்னீரே, எங்கே?" என்று வேலைக்காரர்கள் கேட்டார்கள். நெருப்பு என் வயிற்றில்தான் பற்றிக் கொண்டு எரிந்தது. இப்போது தண்ணீர் விட்டு அணைத்து விட்டேன் என்று கூறிவிட்டுச் சிரித்தார் முல்லா.




## தெரிந்து கொள்வோம் !

* பசிபிக் பெருங்கடலையும் அட்லாண்டிக் பெருங்கடலையும் இணைக்கும் கால்வாய் பனாமா. இது வட, தென் அமெரிக்காக் களை இணைக்கிறது. கால்வாய் அமைக்கப்படுவதற்கு முன்னர் கப்பல்கள் தென்மெரிக்கக் கண்டத்தைச் சுற்றியே செல்ல வேண்டி இருந்தது. 1914ம் ஆண்டு கால்வாய் கட்டி முடிக் கப்பட்டது. அதன் நீளம் 82 கி.மீ, அகலம் 1000 அடி, ஆழம் 45 அடி.

* பேஸ்புக் 2004ல் தொடங்கப்பட்ட இணையவழி சமூக வலையமைப்பு, 13 வய திற்கு மேற்பட்டவர்கள் தங்க ளின் பெயரைப் பதிவு செய்து கொண்டு பேஸ்புக்கில் உள்ள மற்றவர்களை நண்பர்களாக்கி கொண்டு தங்கள் கருத்துக ளைப் பரிமாறிக் கொள்ளலாம். பேஸ்புக் உபயோகிப்பாளர்கள் தங்கள் புகைப்படம், சொந்த விருப்பங்கள், தொடர்புகொள் ளும் விவரம் போன்ற தகவல் களைக் கோப்புகளாக இத் தளத்தில் பதிவு செய் யலாம்.

* கரப்பான் பூச்சிகள் எதை யும் உண்ணக்கூடிய ஒரு அனைத்துண்ணி இனம்.

இதன் உடலில் ஓடும் இரத்தத்தில் ஹீமோகுளோபின் இல்லாததால் இவற்றின் இரத்தம் வெள்ளை நிறமாக இருக்கும்.



## சிறுவர் அமுதம்

### கல்வி



கல்வி என்பது
கண்களைத் திறப்பது!

கல்லாதிருப்பது
கண்களைத் துறப்பது!

செல்வம் அனைத்திலும்
சிறப்பிடம் வகிப்பது!

இல்லார்க் கெடுத்ததை
இறைப்பினும் மிகுப்பது!

எல்லா இடத்திலும்
ஏற்றம் அளிப்பது!

பொல்லா மடமையைப்
பூண்டோ டொழிப்பது!

அல்லும் பகலும்
அணையா விளக்கது!

கல்லில் பதியும்
கலையா எழுத்தது!

சொல்லில் கனிவு
சுவையைக் குழைப்பது!

வெல்லும் துணிவு
விவேகம் விளைப்பது!

### ஹெல்மெட் இருந்தால் தான் வண்டி புறப்படும்

**தி**ருவாரூர் மாவட்டம், நன்னிலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்1 படிக்கும் மாணவிகளான ஆர்த்தி, லைலா டிபானு, வினோதா ஆகிய மூவ ரும், ஹெல்மெட் அணியாமல் வண்டியை ஸ்டார்ட் செய்ய முடியாத வகையில் புதிய கருவியை கண்டுபிடித்துள்ளனர் "ரிமோட் சென்சிங் புரோகிராம்" என்ற தொழில்நுட்ப முறைப்படி இயங்கும் இந்த கருவி பொருத் தப்பட்டுள்ள ஹெல்மெட்டை வாகன ஓட்டிகள் அணிந்தால் மட்டுமே அதற்குரிய இருசக்கர வாகனத்தை இயக்க முடியும் . மேலும், டூவீலர் உரிமையாள ரைத் தவிர மற்றவர்கள் அதை அணிந்து ஸ்டார்ட் செய்தால் வண்டி ஸ்டார்ட் ஆகாது என் பதும் இதன் கூடுதல் சிறப்பம் சம். இதனால் வாகனம் திருட் டுபோவதும் தவிர்க்கப்படும்.

அண்மையில் அகமதாபாத் தில் இளம் விஞ்ஞானிகளுக் கான அறிவியல் கண்காட்சி நடந்தது. இதில், நாடெங்கிலும் உள்ள 12 ஆயிரத்து 800 பள் ளிகள் பங்கேற்றன.

இவற்றில் 8 ஆயிரம் அறிவி யல் கண்டுபிடிப்பு சாதனங்கள் காட்சிப்படுத்தப்பட்டன . அதில் 32 புதிய கண்டுபிடிப்புகள் சிறப்பானதாக அறிவிக்கப்பட் டன. தேர்வு செய்யப்பட்டவை களில் நன்னிலம் பள்ளி மாண விகளின் இந்த கண்டுபிடிப்பு சிறந்ததாக தேர்வு செய்யப் பட்டு பாராட்டு பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**சுடோக்கு எண் 95 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 5 | 4 | 8 | 2 | 1 | 3 | 7 |
| 3 | 7 | 4 | 1 | 6 | 5 | 8 | 2 | 9 |
| 8 | 2 | 1 | 9 | 3 | 7 | 6 | 5 | 4 |
| 1 | 3 | 9 | 5 | 4 | 6 | 7 | 8 | 2 |
| 5 | 6 | 8 | 2 | 7 | 1 | 4 | 9 | 3 |
| 7 | 4 | 2 | 3 | 9 | 8 | 5 | 1 | 6 |
| 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 4 | 1 |
| 9 | 5 | 3 | 7 | 1 | 4 | 2 | 6 | 8 |
| 4 | 1 | 6 | 8 | 2 | 9 | 3 | 7 | 5 |

**சுடோக்கு எண் 96**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | 9 | 8 | | 1 | |
| 2 | | | 1 | | | | 5 | |
| | | | 4 | | | | | |
| 6 | | | | | 5 | | 9 | |
| | | 3 | 8 | | 9 | 7 | | |
| | 1 | | 2 | | | | | 8 |
| | | | | | 4 | | | |
| | 2 | | | | 3 | | | 9 |
| | 3 | | 9 | 2 | | | 6 | |

# வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் கந்தசஷ்டி விரதம்

க கந்தப் பெருமான், ஆரபத்மனை தலைவனாகக் கொண்ட அசுரப்படையை அழித்த திருவிளையாடலைத் தான் கந்தசஷ்டி விரதமாகவும் விழாவாகவும் அனுஷ்டித்து கொண்டாடப்படுகிறது. தேவர்களுக்கு சொல்லொணாத் துன்பம் செய்த சூரபத்மன் மற்றும் சிங்கமுகன் பானுகோபன் போன்ற கொடிய அசுரர் தலைவர்களையும், அசுர குலத்தையும் ஆறு நாள் போரில் அடக்கி ஒடுக்கி சம்ஹாரம் செய்தவர் கந்தப் பெருமான்.

வேலினால் சூரபத்மனைப் பிளந்த கந்தப் பெருமான் அவனின் ஒரு பகுதியை மயில் வாகனமாகவும், மற்றொரு பகுதியை சேவற் கொடியாகவும் தமதாக்கி ஆட்கொண்டு தேவலோகத்தை காத்து அருளினார். "ஆறாறையும் நீத்து அதன் மேல் நிலையை வேறா அடியேன் பெறுமாறு உளதோ! சீறா வருஆர் சிதைவித்து கூறா உலகம் குளிர்வித்தவனே!" என்பது இந்த சூரசம்ஹாரத்தை எடுத்து உரைக்கும் கந்தரனுபூதி பாடலாகும்.

உலகிலே ஜீவராசிகளுக்கும் தாயாய் தந்தையாய் இறைவனாய் இருந்து பரிபாலிக்கும் கந்தவேள் மறக்கருணையால் அசுரர்களின் அசுர இயல்பை அழித்து தேவ இயல்புடன் அவர்களை ஆட்கொண்ட நிகழ்வே சூர சம்ஹாரம். பிளக்க பிளக்க முளைத்த சூரன் ஈற்றில் மரமாக வளர்ந்து நின்றான்.

மரமாக நின்ற சூரனை கந்தப் பெருமான் சஷ்டியில் அறுத்தார் என்பது அவனது ஆண வத்தை அழித்து ஆட்கொண்டார் என்பதே சூரசம்ஹாரத்தின் உட்கருத்தாகும்.

நாம் உடம்பை பெற்றது இறைவனை வணங்கி முத்தி அடைவதற்கே என்பது ஆன்றோர் வாகாகும். இறைவழிபாட்டு மகத்துவமிக்க கந்தசஷ்டி விரதம் முருகப் பெருமானுக்குரிய விரதங்களுள் முதன்மையானதாகும். இதை முறைப்படி அனுஷ்டிப்போர் மற்ற எல்லா விரதங்களையும் நோற்ற பலனை பெறுவர் என்பது ஆன்றோர் அனுபவ வாக்கு. கந்தசஷ்டி விரதம் ஆறு நாட்களை உள்ளடக்கியது. ஆறுநாட்களும் முழுமையான விரதம் அனுஷ்டிப்போர் பூரண உபவாசம் இருந்து ஏழாம் நாள் காலை பாரணை செய்வர்.

அவ்வாறு அனுஷ்டிக்க இயலாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் பால், இளநீர், பழம் ஏதாவது உட்கொண்டு ஆறாவது நாளாகிய கந்தசஷ்டியிலாவது பூரண உபவாசம் இருக்க வேண்டும். இவ்வாறு அனுஷ்டிக்க இயலாதவர்கள் தம் தேக மனநிலைக்கு ஏற்ப திரிகரண சுத்தியுடன் இயன்ற மட்டும் விரதத்தை மேற்கொள்ளலாம். மனச்சுத்தமும் ஆழ்ந்த பக்தியும், நம்பிக்கையுமே முக்கியம். இந்த விரத நாட்களில் கந்தசஷ்டி கவசம், கந்தர் கலி வெண்பா, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருப்புகழ், சண்முககவசம் போன்ற நூல்களிலிருந்து மனதுக்கு உகந்த பாடல்களைப் பாடி கந்தப் பெருமானின் பேரருளைப் பெற்று உய்யலாம்.

இந்த கந்தசஷ்டி நாட்களில் மட்டுமன்றி வாழ்நாள் முழுவதும் நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் முருகனையே நினைத்து அவன் அருட்பாடல்களை பாடிப் பரவி உலகத்தில் தாண்டவம் ஆடும் அநீதிகள், தீமைகள், அறியாமைகள் யாவும் ஒழிந்து, அழிந்து எல்லோரும் இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ பிரார்த்திப்போமாக!

- **மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்.**

# இளைஞர்களே!

## பிரச்சினைகளை எதிர்கொள்ளுங்கள்




இன்றைய உலகம் ஒரே கிளர்ச்சி மயமாக இருக்கிறது. நாடுகளுக்கிடையே பிரச்சினைகள், மனிதர்களுக்கிடையே பிரச்சினைகள் என்று எங்கு பார்த்தாலும் பிரச்சினைமயமாக உள்ளது.

பலவகையான பிரச்சினைகளுக்குள் உடனடியான தீர்வை எதிர்நோக்கி உள்ளது ஒன்று. அது நமது நாட்டிற்கு மட்டும் அல்லாது உலகம் முழுவதற்குமான பிரச்சினை. அதுதான் இளைஞர் பிரச்சினை.

இளைஞர்கள் சமுதாயத்திற்குப் பிரச்சினையா? சமுதாயம் இளைஞர்களுக்குப் பிரச்சினையா? அல்லது இரண்டுமே ஒன்றுக்கொன்று பிரச்சினையா? எப்படியோ பிரச்சினை இன்று சமுதாயத்தின் அமைதியைக் கெடுக்கக் கூடிய ஒன்றாக உருவெடுத்துவிட்டது.

ஒருவேளை இளைஞர்கள் சிறிதும் பொறுப்பில்லாது சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொண்டிருக்கலாம். அல்லது முதியவர்கள் இளைஞர்களின் பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தியிருக்கலாம். விளைவு என்னவோ அனைவரும் துன்பத்திற்கு உள்ளாயிருக்கிறார்கள் என்பது தான். துன்பம் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. அது சிறுபிள்ளை விளையாட்டு அல்ல.

ஆனால் இளைஞர்- பிரச்சினை என்பது தற்காலத்தில் மட்டும் காணப்படும் சாபக்கேடு அல்ல. பிளேட்டோ 2300 ஆண்டுகளுக்கு முன்பே எழுதினார்.

"நம்முடைய இளந்தலைமுறையினருக்கு என்ன நேர்ந்துவிட்டது? அவர்கள் பெரியவர்களிடம் மரியாதை காட்டுவது கிடையாது. பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிவதில்லை. அவர்கள் சட்டத்தையும் பொருட்படுத்துவதில்லை. தீவிரவாத எண்ணங்களை வளர்த்துக்கொண்டு தெருவிர் கலகம் விளைவிக்கிறார்கள். ஒழுக்கம் கெட்டு வாழ்கிறார்கள். அவர்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது? " - இது இன்று முதியவர்கள் உரத்த குரலில் அழுவதன் எதிரொலி போல் கேட்கிறது அல்லவா?

இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளைப் பற்றியோ ஆலோசனைகளைக் கூறுவது பற்றியோ தீர்மானிப்பதற்கு முன்பு செய்ய வேண்டியது ஒன்று உண்டு. அதாவது இளைஞர்களின் பிரச்சினைகளை முதலில் இனம்காண வேண்டும்: பின்னர் அவைகளை வகைப்படுத்த வேண்டும்.

அதற்கும் முன்பு இந்த 'இளமை' என்பதுபற்றிச் சற்று சிந்திக்க வேண்டும்.

வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் ஒரு காலகட்டத்தில் இளைஞராக இருக்கின்றோம். நேற்றைய இளைஞர்கள் இன்றைய முதியவர்கள், இன்றைய இளைஞர்கள் நாளைய முதியவர்கள். இது மறுக்க முடியாத நியதி.

தத்துவரீதியாகப் பேசுவோமேயானால் இளமை என்பது நிலையற்றது. அது வந்து போவதை யாரும் தவிர்க்க முடியாது. அதில் அளவுக்கு மிஞ்சிய பற்று கூடாது. இளமையை நிலையாகத் தக்க வைத்துக் கொள்வோம் என்பது முடியாத காரியம். அவ்வாறு செய்ய நினைப்பது ஒருவனை மனத்துயரிலேயே கொண்டு சேர்க்கும்.

இந்தக் கோணத்தில் பார்த்தோமானால், இளமை நிலையற்றது என்பதால் காலமே இளைஞர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவிடும். எனவே அதற்காக ஒரு தனி முயற்சி தேவை இல்லை.

ஆனால் பிரச்சினை அவ்வளவு சுலபமாக விட்டுவிடக் கூடியது அல்ல. ஒவ்வொரு தனிநபர் வாழ்க்கையிலும், குறிப்பிட்ட காலத்தில் இளமை வருகிறது, போயும்விடுகிறது. தனிநபர் வாழ்கையில் போய்விட்டாலும், சமுதாயம் என்று எடுத்துக் கொண்டால் அதில் இளைஞர்கள் எப்போதும் இருந்து கொண்டுதான் இருப்பார்கள். அவர்களுக்குப் பிரச்சினைகள் இருக்கவே செய்யும். அவர்களாலும் சமுதாயத்திற்குப் பிரச்சினைகள் இருந்து கொண்டுதான் இருக்கும்.

இளைஞர் என்பதுபற்றி ஆராய்ந்தோம். இனி 'நவீன இளைஞர்கள்' என்பது பற்றி பார்ப்போம்.

வரலாற்றின் எந்த ஒரு கால கட்டத்திலும், அந்தக் குறிப்பிட்ட காலத்தில் வாழும் இளைஞர்கள் அந்தக் காலத்தின் 'நவீன இளைஞர்கள்' தான். இது தெளிவான உண்மை. அதனால் இன்றைய இளைஞர்களிடம் 'நவீனம்' என்று சொல்வதற்கு புதிதாக என்ன உள்ளது?

பண்டைய மரபுகளின் வழி வளர்க்கப்பட்ட இளைஞர்களையும், அதுபோலவே, நவநாகரிகமாக வாழ்கின்ற முதியவர்களையும் இன்று நாம் காணலாம்.

உண்மையில் 'நவீனம்' என்பது மனத்தின் ஒரு பண்பு. கடந்த காலத்தின் சிறப்பான அம்சங்களை மதித்து, தற்காலச் சிந்தனைகளைப் புரிந்து கொண்டு அவற்றின் துணையுடன் எதிர் காலத்தைப் பார்ப்பதற்கு இந்த மனப்பான்மை உதவுகிறது. இத்தகைய நவீன மனிதர்களுக்கு, வழக்கமான, பழைய சிந்தனைகள் பிடிக்காது. அது அவர்களுக்கு அந்நியமாகப் படும். இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால், மனித இனத்தின் மிகப்பெரும் தலைவர்கள் அனைவருமே 'நவீனமானவர்'களாகவே இருந்தார்கள். இன்றும் இருக்கின்றார்கள்.

ஆனால் இன்றைய நவீனம் என்றால் அது மேலைநாட்டுக் கலாசாரம், அதிலும் குறிப்பாக அமெரிக்கக் கலாசாரம் என்றே கருதப்படுகிறது.

உடல்ரீதியாகப் பார்த்தால், வாழ்கையின் மிகச் சிறந்த கட்டம் இளமைக் காலமே. அப்போதுதான் உடல் ஆராக்கியம், பலம், சக்தி ஆகியவை மிகுந்து காணப்படும். உடல் வலுவும், அளவுக்கு அதிகமான சக்தியும் இருப்பதனால்தான் இளைஞர்கள் மிகவும் தைரியசாலிகளாக இருக்கிறார்கள். எதையாவது சாதிக்க வேண்டும் என்று துணிந்து செயலாற்ற முற்படுகிறார்கள். பெரிய லட்சியங்கள் இயற்கையாகவே அவர்களிடம் வந்துவிடுகின்றன. இதனால் அவர்கள் கடினமாக உழைப்பார்கள். எத்தகைய துன்பங்களையும் சகித்துக் கொள்ளத் தயாராக இருப்பார்கள். தோல்வியைக் கண்டு துவள மாட்டார்கள். எப்படியும் வெற்றி பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கை அவர்கள் ரத்தத்தில் இருக்கும்.

மனஇயலின்படி பார்த்தால், அவர்கள் புதுப்புது சிந்தனைகளைத் தேடுவதில் எப்போதும் ஆர்வமாய் இருப்பார்கள். பழமைக் கருத்துக்களைப் பற்றித் தயவு தாட்சண்யம் பாராமல் கேள்வி கேட்பார்கள். ஒதுங்கிவிடுவார்கள்.

இளைஞர்களின் இந்தத் துடிப்பின் எதிர்மறையான விளைவு அவர்களிடம் முரட்டுத்தனத்தை வளர்க்கும். கொடூரத்தையும் துன்பத்தையும் விளைவிக்க நேரிடும். அவர்களின் மன வலிமையைப் புலன்களின் வலிமை வெற்றி கொள்வதால் அவர்கள் நிதானத்தையும் சுயக் கட்டுப்பாட்டையும் இழந்து விடுகிறார்கள். இதுவே பொறுமையற்ற தன்மைக்கும், கோபத்திற்கும், நிம்மதியற்ற நிலைக்கும் கொண்டு சென்று விடுகிறது.

பேரார்வம் காரணமாக, அவர்கள் எந்த முயற்சிக்கும் உடனடியாக நல்ல பலனை எதிர்பார்க்கத் தொடங்குவார்கள். முயற்சிகளில் இடையூறு ஏற்பட்டால் ஏமாற்றத்தால் மனமுடைந்து போவார்கள்.

இன்பத்தை நாடுவது என்பது எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானது. இளவயதின் அதிகப்படியான சக்தியின் காரணமாக அதுவும் அவர்களுக்குப் பாதகமாகிவிட வாய்ப்பு உண்டு.

எல்லாவற்றை விடவும் பயங்கரமானது, அந்த வயதில் அவர்களிடம் தோன்றுகின்ற 'தலைவன் ஆதிக்கம்' தான் (Hero worship) தங்களுக்குப் பிடித்த யாராவது ஒருவனைத் தலைவனாக ஏற்றுக்கொள்வார்கள். அந்தத் தலைவனுக்காக எதையும் செய்யத் தளாராக இருப்பார்கள்: தங்கள் அறிவையும் உணர்ச்சிகளையும் அந்தத் தலைவனுக்கு அடிமைப்படுத்தியது போலவே நடந்து கொள்வார்கள்.

மேலே கூறப்பட்ட எல்லாம் இன்றைய இளைஞர்களுக்குப் பொருந்தும். ஏனெனில் அவர்களும் இளைஞர்- வர்க்கத்தினரின் ஓர் அங்கமே அல்லவா? ஆனாலும் இன்றைய இளைஞர்கள் என்னும்போது இன்னும் சிலவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

நாகரிகம் மாறும் போதெல்லாம் மாறுகின்ற நவ நாகரிக உடை, முடி அலங்காரம், நுனி நாக்கில் ஆங்கிலம், அறிவியலில் நாட்டம், குடி, போதைப் பழக்கம் போன்றவற்றிற்கு அடிமையாக இல்லாவிட்டாலும் அவை தவறல்ல என்று நியாயப்படுத்துகின்ற போக்கு, எதற்கெடுத்தாலும் சந்தேகம், நாத்திகம், மதங்களையும் மத ஸ்தாபனங்களையும் வெறுத்தல், உணவு விடுதிகளுக்கும் மதுபானம் போன்ற போதைப் பொருள் விற்கும் இடங்களுக்கும் சினிமா அரங்கங்களுக்கும் அடிக்கடிச் செல்வது போன்றவை அவற்றுள் சில.


இளைஞர்களைப்பற்றி கண்டோம். இனி அவர்களின் பிரச்சினைகளையும் தீர்வையும் காண்போம்.

பிரச்சினைகள் இல்லாத எந்த உயிரினமும் இருக்கமுடியாது உண்மை என்னவென்றால் பிரச்சினைகள்தான் உயிரினங்களின் முன்னேற்றத்துக்கு ஊண்டுகோலாக அமைகின்றன. எனவே, பிரச்சினைகளை வாழ்க்கையின் ஒரு பக்கமாக ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். அதற்காக பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் மௌனமாக அவர்களை சகித்துக் கொண்டு அவதிப்பட வேண்டும் என்பது கிடையாது.

தொடரும்...

# யஸீர் அரபாத் விஷம் வைத்து கொல்லப்பட்டாரா?

## விசாரணைகள் தீவிரம்



பாலஸ்தீனத்தின் முன்னாள் தலைவரான யஸீர் அரபாத் விஷம் வைத்து கொல்லப்பட்டார் என தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. கடந்த 2004 ஆம் ஆண்டு பிரான்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கொண்டிருந்த அரபாத் உயிரிழந்தார். இதனையடுத்து அரபாத்தின் உடல் மேற்கு கரையின் ரமல்லா நகரில் அடக்கம் செய்யப்பட்டது.

இதற்கிடையே யஸீர் அரபாத் பயன்படுத்திய உடைகளிலும், பொருட்களிலும் கதிரியக்க வீரியம் கொண்ட பொலோனியம் என்ற இரசாயனம் அதிகமாக காணப்பட்டது என்று கண்டறியப்பட்டதை அடுத்து, அரபாத் மரணம் ஒரு கொலையாக இருக்கலாம் என்ற நோக்கில் பிரான்சில் விசாரணை ஆரம்பித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அரபாத்தின் உடலை தோண்டி எடுத்து, பரிசோதனைகள் நடக்க உள்ளது.

# உலக நாடுகளிடையே கடும் போட்டி




ஐ.நா. சபையின் மனித உரிமைகள் குழுவில் இடம்பெற நாடுகளிடையே கடும்போட்டி ஏற்பட்டுள்ளது. 47 உறுப்பினர்கள் அடங்கிய மனித உரிமைகள் குழுவில் 18 இடங்களுக்காக வாக்கெடுப்பு நடக்கவுள்ளது. ஆபிரிக்க, ஆசிய, தென் அமெரிக்க மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தங்களது பிரதிநிதிகளுக்கான ஆதரவை ஏற்கெனவே உறுதி செய்துவிட்டதால் அவர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்புள்ளது.

இந்நிலையில் 18 இடங்களுக்கு தேர்தல் நடைபெற உள்ளது. இதில் இறுதி மூன்று இடங்களுக்கு, அமெரிக்கா, ஜேர்மனி, கிரீஸ், அயர்லாந்து, ஸ்வீடன் ஆகிய 5 நாடுகள் போட்டியிடும் இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்கிறது.

மனித உரிமைகள் குழுவில் இடம்பெறத் தகுதியில்லாத போதிலும் பாகிஸ்தான், வெனிசூலா உள்ளிட்ட சில நாடுகள் உறுப்பினராவது உறுதியாகி உள்ளது என்றும், அமெரிக்கா உள்ளிட்ட 5 நாடுகள் கடைசி மூன்று இடங்களுக்குப் போட்டியிட வேண்டியிருப்பது வேதனை அளிக்கிறது என்றும் பல மனித உரிமை குழுக்கள் குறை கூறியுள்ளன.

# கனடா மக்கள் மத்தியில் நம்பத்தகாத பிரதமராக வலம் வரும் ஹார்ப்பர்



கனடாவில் Environics Institute நடத்திய புதிய கருத்துக்கணிப்பில் மக்களுக்கு அரசியல்வாதிகள் மீது நம்பிக்கை குறைந்திருப்பது தெரிய வந்துள்ளது.

GLOBE AND MAIL வெளியிட்ட இந்த ஆய்வின் முடிவுகளில் கனடா பிரஜைகளுக்கு அரசியல் கட்சிகள் மீது 10 சதவீதம் நம்பிக்கையும் நாடாளுமன்றத்தின் மீது 7 சதவீதம் நம்பிக்கையும் இருப்பது தெரிய வந்துள்ளது.

இதில் அரசியல் தலைவர்களில் பிரதமர் ஸ்டிபன் ஹார்ப்பர் மீது மக்களுக்கு மிகக்குறைந்த நம்பிக்கையே உள்ளது. அதாவது, கனடாவில் 16 சதவீதம் மக்கள் மட்டுமே அவர் மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள். சர்வதேச தலைவர்களில் இவரே நம்பகத்தன்மையற்றவராக இருக்கிறார் என்று Environics Institute கீத் நியுமன் தெரிவித்தார்.

ஹார்ப் பரும் அவரது கட்சியினரும் பொதுவிடத்தில் சிடுசிடுவென்று நடந்து கொள்கின்றனர்.

வலதுசாரிச் சிந்தனையாளரிடம் அதிகமாகக் கோபப்படுகின்றனர் என்று முன்னாள் லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர் டேன் மெக்டீக் தெரிவித்துள்ளார்.

# இளவரசர் மீது சாணத்தை வீச முயன்ற நபர் கைது

பிரிட்டன் இளவரசர் சார்லசும், இவரது மனைவி கமீலாவும் சமீபத்தில் நியூசிலாந்துக்கு பயணம் மேற்கொண்டனர். அங்கு ஆக்லாந்து பகுதியில் பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அப்போது பொதுமக்களிடையே நின்றிருந்த நபர், இளவரசர் சார்லஸ் மீது குதிரை சாணத்தை வீச முயன்றுள்ளார்.

இதனையடுத்து அந்த நபர் கைது செய்யப்பட்டார். இவரது பெயர் சாம் பிராக்கனோவ் (வயது 74) என்றும், மன்னராட்சிக்கு எதிரானவர் என்றும் தெரிய வந்துள்ளது. இளவரசர் சார்லஸ் கடந்த 1994ஆம் ஆண்டு நியூசிலாந்து வந்த போதும், அவர் மீது கழிவு நீரை தெளிக்க பிராக்கனோவ் முயற்சி செய்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.


# ஐக்கிய அரபு எமிரேட்டில் இணையத்தளங்களுக்கு கட்டுப்பாடு

ஆட்சி மாற்றம் கோரி போராட்டம் வெடிக்கும் சூழல் இருப்பதால் அரபு நாடுகளில் இணையத் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. எகிப்து, துனிஷியா, லிபியா, ஏமன் உள்ளிட்ட நாடுகளில் போராட்டக்காரர்களின் தொடர் போராட்டத்தால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

இந்த போராட்டங்களில் இணையத்தளங்கள் முக்கிய பங்கு வகித்தன. இந்நிலையில் தற்போது குவைத், பக்ரைன் உள்ளிட்ட நாடுகளில் எதிர்கட்சியினர் ஆட்சி மாற்றம் குறித்து போராட்டம் நடத்துகின்றனர். இந்தப் போராட்டங்கள் குறித்த தகவல்கள் இணையத்தில் பரிமாறப்படுவதால், கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மேலும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டும் வருகின்றன.

# உலக பார்வை

# தீவிரவாதி அபு கதாதா ஜாமீனில் விடுதலை



தீவிரவாதியான அபு கதாதா நிபந்தனையுடன் கூடிய ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். தீவிரவாத குற்றங்கள் புரிந்ததாக அபு கதாதா கைது செய்யப்பட்டார். இவரை தங்களிடம் ஒப்படைக்கும்படி ஜோர்டான் பிரிட்டன் அரசிடம் கோரிக்கை விடுத்தது.

ஆனால் ஜோர்டானுக்கு அனுப்பினால் அங்கு மனிதநேயமற்ற முறையில் நடத்துவார்கள், எனவே அங்கு அனுப்ப வேண்டாம் என அபு கதாதா பிரிட்டன் அரசை கேட்டு கொண்டார். இந்நிலையில் இவர் நிபந்தனையுடன் கூடிய ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.


அதாவது, இவர் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை மட்டுமே வெளியே செல்ல வேண்டும். அவ்வாறு செல்லும் போது Electronic Tag ஒன்றை அணிந்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அப்போது தான் இவர் எங்கு செல்கிறார் என்பதை கண்காணிக்க முடியும். இதற்கிடையே இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ய போவதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.



லண்டன் வந்துள்ள ஜெர்மன் அதிபர் ஜோகிம் குவாக்கை வரவேற்றுப் பேசிய பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத்.

## பெண்ணுக்கு தவறான மின்னஞ்சல்:

# அமெரிக்க தளபதி மீது விசாரணை தொடக்கம்



ஆப்கான் அமெரிக்க படைகளின் தளபதியான ஜெனரல் ஜான் அல்லென் வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்துள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏ.வின் தலைவர் பதவியிலிருந்து டேவிட் பெட்ரேயஸ் என்பவர் சமீபத்தில் பதவி விலகினார்.

இவருக்கும், ஜில் கென்னி என்ற பெண்ணுக்கும் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டதை அடுத்தே பதவி விலகினார். இந்நிலையில் இந்த பெண்ணுக்கும், ஜெனரல் ஜான் அல்லென்னுக்கும் தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

என்னுடைய மனதைப் புண்படுத்தும் விதமாக மின்னஞ்சல்கள் வந்து கொண்டிருக்கிறது என ஜில் கென்னி புகார் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அந்த மின்னஞ்சல்கள் எங்கிருந்து வருகின்றன என ஆராயப்பட்டது.

இதில் மின்னஞ்சலை அனுப்பிய நபருக்கும், ஜெனரல் ஜான் அல்லெனுக்கு தொடர்பு இருப்பது கண்டறிப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்தே ஜான் அல்லென் மீதான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் ஜெனரல் ஜான் அல்லென் ஆப்கானில் தளபதியாக நீடிப்பார் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனெட்டா அறிவித்துள்ளார்.

# இந்தியாவுடன் இராணுவ உறவை மேம்படுத்த அவுஸ்திரேலியாவுக்கு ஹிலாரி வேண்டுகோள்

இந்தியாவுடனான இராணுவ உறவை அவுஸ்திரேலியா மேம்படுத்திக் கொள்ள வேண்டுமென அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கூறியுள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் மற்றும் அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லியோன் பனெட்டா இருவரும் அவுஸ்திரேலியா சென்றுள்ளனர். அங்கு பல்கலைக்கழகம் ஒன்றில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூறியதாவது:

ஆசிய விவகாரங்களில் இந்தியா முக்கிய பங்காற்ற வேண்டும் என்பதற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவிக்கும். இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா இடையே இராணுவ ஒத்துழைப்பு அதிகரிக்கப்பட வேண்டும். எதிர் காலத்தில் இந்தியா அவுஸ்திரேலியா இடையே இராணுவ கூட்டு பயிற்சி நடந்தால் அதை வரவேற்போம் எனவும் அங்கு கூறியுள்ளார்.

# இந்திய செய்திகள்

# சிறுநீரகங்களை விற்று கணவன்களை மீட்கப் பெண்கள் நடவடிக்கை

டுபாய் சிறையில் உள்ள தங்களது கணவன்களை மீட்க, ஆந்திராவைச் சேர்ந்த மனைவிகள் சிறுநீரகத்தினை விற்க அனுமதி கோரி மனித உரிமை ஆணையத்திடம் மனு அளித்துள்ளனர்.

ஆந்திராவின் கரீம் நகரைச் சேர்ந்த ஏழை குடும்பத்து பெண்கள் 6 பேர் அம்மாநில மனித உரிமை ஆணையத்திடம் மனு ஒன்றினை கொடுத்தனர்.


அதில் துபாய்க்கு வேலைக்கு சென்ற தங்களது கணவன்கள் அங்கு நேபாள் செக்யூரிட்டி ஒருவரை கொலை செய்த வழக்கில் 24 ஆண்டுகள் தண்டனை பெற்றுள்ளனர்.

அவர்களை கருணை அடிப்படையில் பொதுமன்னிப்பு அளித்து விடுவிக்க கோரியும், அவர்களை விடுவிக்கும் பொருட்டு நஷ்டஈடு கட்ட, தங்களிடம் உள்ள சிறுநீரகம் ஒன்றினை விற்க அனுமதிக்க வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்காக நீதிமன்ற வழக்கு செலவிற்காக் தோரயமாக ரூ. 15 இலட்சத்திற்கு தங்களது ஆறு சிறுநீரகங்களை விற்க அனுமதிக்க வேண்டும் எனவும் அந்த மனுவில் கூறியுள்ளனர்.

இம்மனுவை விசாரித்த மனித உரிமை ஆணையம், பொதுநிர்வாகத்துறையின் Non-Resident Indian (NRI) க்கு 2013ஆம் ஆண்டிற்குள் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளது.

# தே.மு.தி.க சட்டத்தரணியின் பதவி பறிப்பு: விஜயகாந்த் அதிரடி



மாநில சட்டத்தரனிகள் அணி செயலரை, அப்பொறுப்பிலிருந்து தேமுதிக தலைவர் விஜயகாந்த் திடீரென நீக்கியுள்ளார். தேமுதிக மாநில சட்டத்தரனிகள் அணி செயலராக செயற்பட்டு வந்த மணிமாறன், விஜயகாந்தின் தனிப்பட்ட சட்டத்தரணியாகவும் இருந்து பல்வேறு வழக்குகளிலும் ஆஜராகியுள்ளார். ரிஷிவந்தியம் தொகுதியில் விஜயகாந்த் வெற்றிப் பெற்றது செல்லாது என அறிவிக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கிலும் விஜயகாந்தின் சட்டத்தரனியாக மணிமாறன் செயற்பட்டு வந்தார். இந்நிலையில் மணிமாறனை கட்சிப் பொறுப்பில் இருந்து விஜயகாந்த் அதிரடியாக நீக்கியுள்ளார்.

# இராமரை விமர்சித்த மலானி மீது துப்பினால் பரிசு ரூ.5 இலட்சமாம்

சமீபத்தில் ராமரை விமர்சித்த மூத்த சட்டத்தரனி ராம்ஜெத்மலானி மீது காரி உமிழ்பவருக்கு ரூ.5 இலட்சம் பரிசாக வழங்கப்படுமென சாமியார் ஒருவர் அறிவித்திருக்கிறார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு ராமர் பற்றி பேசிய மலாணி, மீனவர்கள் சிலர் பேச்சைக் கேட்டு தன் மனைவி சீதையை தீக்குளிக்கச் சொன்ன ராமர், மிகவும் மோசமான கணவர் என்று குறிப்பிட்டிருந்தார்.




இந்நிலையில் இந்த பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மத்திய பிரதேச மாநிலம் ஜபல்பூரைச் சேர்ந்த மகாமண்டலேஸ்வர் சுவாமி ஷயாம் தாஸ் மகரான் என்ற சாமியார் திடீர் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் ராமரைப்பற்றி தவறாக கூறிய ராம் ஜெத்மலானியின் முகத்தில் காரி உமிழ்பவருக்கு ரூ.5 இலட்சம் பரிசாக வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

ராம் ஜெத்மலானியின் கருத்தால் வெகுண்ட தனது சீடர்கள், இது தொடர்பாக தம்மை போனில் தொடர்ந்து தொடர்பு கொண்டு, அவரை கண்டிக்குமாறு கேட்டுக் கொண்டதாகவும் இதையடுத்தே இந்த அறிவிப்பை வெளியிடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

சாமியாரின் இந்த அறிவிப்பை அடுத்து அவரது சீடர்களும் இளைஞர்களும் ராம் ஜெத்மலானி குறித்து அறியவும், அவரது வீட்டு முகவரியைக் கண்டு பிடிக்கவும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.



மும்பையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொள்ள வருகை தந்த பிரபல ஹொலிவூட் நடிகர் ஹிருத்திக்ரோஷன் மற்றும் அவரது மனைவியும்.

# கவர்ச்சி விளம்பரத்தின் மூலம் ரூ.500 கோடி மோசடி செய்த தம்பதியினர் கைது

இந்தியாவில் உள்ள பல மாநிலங்களில் ரூ. 500 கோடி வரை மோசடியில் ஈடுபட்ட தம்பதியினரை டெல்லி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஸ்டாக் குரு இந்தியா நிதி நிறுவன அதிபர்களான உலாஸ் பிரபாகர் கைரே (வயது 33), ரக்ஷா உர்ஸ் (வயது 30) இருவரும் கடந்த 1 1/2 ஆண்டுகளுக்கு முன்பு தலைமறைவாகினார்கள்.

தங்களது நிதி நிறுவனத்தில் முதலீடு செய்பவர்களுக்கு 6 மாதத்தில் பணத்தை இரட்டிப் பாக்கி தருவதாக இவர்கள் வெளியிட்ட கவர்ச்சி விளம்பரங்களை நம்பி சுமார் 2 இலட்சம் பேர் ரூ.500 கோடி வரை முதலீடு செய்திருக்கக்கூடும் என்று டெல்லி பொலிஸார் கருதுகின்றனர்.

முதலீட்டாளர்களின் பணத்தை போலி பெயர்களில் தொடங்கிய 94 வங்கி கணக்குகளில் சேமித்து வைத்திருந்த இந்த மோசடி தம்பதியினர் கடந்த 1 1/2 ஆண்டுக்கு முன் டெல்லியில் இருந்து தலைமறைவாகி விட்டனர்.




இவர்களை கைது செய்ய டெல்லிப் பொருளாதாரக் குற்றப் பிரிவுப் பொலிஸார் வலைவீசி தேடி வந்தநிலையில், மகாரார்'டிர மாநிலம் ரத்னகிரி பகுதியில் புதிதாக நிதி நிறுவனம் ஒன்றை தொடங்கி, அங்கும் மோசடியில் ஈடுபட்ட இவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முதல்கட்ட விசாரணையில், முக அமைப்பை மாற்றி, பல்வேறு போலி பெயர்களில் வாக்காளர் அடையாள அட்டை போன்ற புதிய ஆவணங்களை தயாரித்த இவர்கள், ஊருக்கு ஊர் பெயரை மாற்றி மோசடியில் ஈடுபட்டது தெரிய வந்துள்ளது.

# இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மூவருக்கு ஒபாமா அழைப்பு

தனிப்பட்ட முறையில் ஆலோசனை பெறும் நோக்கில் இந்திய வம்சாவளியை சேர்ந்த அமெரிக்க பிரபலங்கள் மூவருக்கு ஜனாதிபதி பாரக் ஒபாமா அழைப்பு விடுத்துள்ளார்.

தற்போது மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியின் படி சரிந்திருக்கும் அமெரிக்க பொருளாதாரத்தை மீண்டும் சீர்தூக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

இதன் தொடர்ச்சியாக அமெரிக்காவின் பங்குவர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்தும் முக்கிய தொழிலதிபர்கள், காங்கிரஸ் தலைவர்கள், பொதுமக்களின் பிரதிநிதிகளை அழைத்து ஆலோசனை கேட்டு வருகிறார்.இதன் அடிப்படையில் இந்திய வம்சாவளியினர் மூவருக்கு ஒபாமா அழைப்பு விடுத்துள்ளார்.

இதில் பெப்சி கோ நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் இந்திரா நூயி மற்றும் அமெரிக்கர்களின் வளர்ச்சிக்கான மையத்தின் தலைவர் நீரா தண்டொன், சமூக மாற்றத்திற்கான மையத்தின் தலைவர் தீபக் பர்காவா ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# குழந்தைகள் தினத்தில் சூகிக்கு நேரு விருது


முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேருவின் பிறந்த நாள் இந்தியா முழுவதும் குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது. புதுடெல்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இதற்கிடையே அரசு முறை சுற்றுப்பயணமாக இந்தியா வந்துள்ள மியான்மர் நாட்டின் எதிர் கட்சித்தலைவர் ஆங் சான் சூசிக்கு ஜவகர்லால் நேரு விருது வழங்கப்படுகிறது.

நேருவின் பிறந்த நாளை முன்னிட்டு டெல்லியில் நாசவேலைகளில் ஈடுபட இந் தியன் முஜாகிதீன் தீவிரவாத அமைப்பினர் திட்டமிட்டிருப்பதால் தீவிர கண்காணிப்பில் மத்திய பாதுகாப்புப்படை பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# ஒலிம்பியாட் போட்டியில் மன்னார் மாணவனுக்கு வெண்கலப்பதக்கம்

சர்வதேச ரீதியில் நடைபெற்ற 9ஆவது சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவன் செல்வன் ஜே.யூட் மிதுஷன் பிகிராடோ வெண்கலப் பதக்கம் பெற்றுள்ளதாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.



இலங்கை, இந்தியா, சீனா, இந்தோனேஷியா, ஈரான், மலேசியா, நேபாளம், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, கொரியா, தாய்வான் ஆகிய நாடுகளுக்கிடையில் சர்வதேச ரீதியில் நடைபெறும் ஒலிம்பியாட் போட்டியின் 9ஆவது சர்வதேசப் போட்டியானது ஒக்டோபர் மாதம் 29 தொடக்கம் நவம்பர் முதலாம் திகதிவரை புதுடில்லியில் நடைபெற்றது.


இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இப்போட்டியில் பங்குபற்றிய மிதுஷன் பிகிராடோ இதில் வெண்கலப்பதக்கம் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

இவர் மாகாண மட்டத்தில் நடைபெற்ற ஒலிம்பியாட் போட்டியில் வட மாகாணத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவானார். தேசிய மட்டப் போட்டியில் 8ஆம் இடத்தைப் பெற்று சர்வதேச போட்டிக்குத் தெரிவான இவர், சர்வேதேசப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை பெற்றுள்ளார்.

இவரை மன்னார் வலயக்கல்வி அலுவலகத்தின் சார்பாக பாராட்டுகின்றோமென மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எம். சியான் தெரிவித்தார்.

# பிளெட்சருக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும்

-ராகுல் ட்ராவிட்




இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் டங்கன் பிளெட்சருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் தலைவர் ராகுல் ட்ராவிட் தெரிவித்துள்ளார். அத்தோடு தேசிய அணியின் பயிற்றுவிப்பாளர் பதவி மேலும் பொறுப்புக்குரியதாக மாற்றப்பட வேண்டும் எனவும் ராகுல் ட்ராவிட் தெரிவித்துள்ளார்.

இந்திய அணிக்கு உலகக்கிண்ணத்தைப் பெற்றுக் கொண்ட பயிற்றுவிப்பாளரான கரி கேர்ஸ்டனின் பின்னர் அவரின் சிபாரிசிலேயே இந்திய அணியின் பயிற்றுவிப்பாளராகப் பதவியேற்ற டங்கன் பிளெட்சர், இதுவரையில் இந்திய அணிக்கு தொடர்ச்சியான சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுத்திருக்கவில்லை.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள ராகுல் ட்ராவிட், ஒரு பயிற்றுவிப்பாளராக டங்கன் பிளெட்சர் அதிக வலிமைகளைக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். அணியின் வீரர்களோடு டங்கன் பிளெட்சர் சிறப்பான முறையில் இணைந்து செயற்படுவதாகத் தெரிவித்த அவர், எனினும் அவருக்கான அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

முடிவுகளை எடுப்பதற்கான அதிகாரம் அல்லது அணித்தேர்வுகளை மேற்கொள்வதற்கான அதிகாரங்கள் என்பன டங்கன் பிளெட்சருக்கு மட்டுப்படுத்தபட்ட அளவில் காணப்படுவதாக ராகுல் ட்ராவிட் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பயிற்றுவிப்பாளர்களாக இதற்கு முன்னர் பதவி வகித்த வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் அணியின் தேர்வு தொடர்பாகவும், உள்ளூர்ப் போட்டிகள் அதிகமானவற்றையும் பார்வையிட்டதாகத் தெரிவித்தார். குறிப்பாக ஜோன் ரைட், கிரெக் சப்பல் ஆகியோர் அணித்தேர்வு தொடர்பான சந்திப்புக்களில் பங்குபற்றியிருந்ததாகத் தெரிவித்தார்.

# இந்திய – பாகிஸ்தான் தொடரை உலகமே ஆவலுடன் எதிர்பார்க்கிறது

\- வசீம் அக்ரம்



பிரச்சினைகளற்ற இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர்பாக நம்பிக்கையுடன் காணப்படுவதாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணி இந்தியாவிற்கான கிரிக்கெட் சுற்றுப் பயணத்திற்காக டிசெம்பர் மாத இறுதியில் இந்தியாவிற்கு வருகை தரவுள்ளது. இதன்போது அவ்வணி 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், இரண்டு ரி-20 போட்டிகளில் பங்குபெறவுள்ளது.

இந்நிலையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இத்தொடர் நிறுத்தப்பட வேண்டும் என இந்தியாவைச் சேர்ந்த இந்து அமைப்புக்கள் சில கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாக இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ள அமைப்புக்கள், இத்தொடருக்கெதிராக போராட்டங்களை ஏற்பாடு செய்யப்போவதாகவும் அறிவித்துள்ளது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள வசீம் அக்ரம், இந்த எதிர்ப்புக்களை இந்தியாவும், பாகிஸ்தானும் ஒரு சிறந்த உந்துகையாகக் கருத்திற் கொண்டு இத்தொடரைச் சிறப்பான தொடராக ஏற்பாடு செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இத்தொடர் எப்போது இடம்பெறும் என்பதை ஆர்வத்துடன் எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொடரை மகிழ்ச்சிக்குரியாகவும், பாதுகாப்பானதாகவும் இந்திய அரசு ஏற்பாடு செய்யும் எனத் தான் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த வசீம் அக்ரம், முழு உலகமே இந்தத் தொடரை எதிர்பார்ப்புடன் காத்திருப்பதாகவும் தெரிவித்தார். அத்தோடு இந்தத் தொடர் மிகுந்த சிறப்பான தொடராக இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மேற்கிந்தியா – பங்களாதேஷ் மேற்கிந்தியத் தீவுகள் ஆதிக்கம்

பங்களாதேஷிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், பங்களாதேஷ் அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நேற்று ஆரம்பமானது. முதல்நாள் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சிறப்பான நிலையில் காணப்படுகிறது.

மிர்புர் ஷேரே பங்களா தேசிய மைதானத்தில் இடம்பெறும் இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 361 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றிருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, அதன் பின்னர் 4ஆவது விக்கெட்டுக்காக 125 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஷிவ்நரின் சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 123 ஓட்டங்களையும், கொரான் பவல் 117 ஓட்டங்களையும், டினேஷ் ராம்டின் ஆட்டமிழக்காமல் [illegible] ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக அறிமுக வீரரான சொஹக் கிஷி 3 விக்கெட்டுக்களையும், ஷகாதத் ஹொஸைன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நாளை தொடரவுள்ளது.

# அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்க டெஸ்ட் தொடர் முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவு

அவுஸ்ரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் அவுஸ்ரேலிய அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ற் தொடரின் முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது.

நான்காவது நாள் முடிவில் 4 விக்கட்டுக்களை இழந்து 487 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இன்றைய நாளைத் தொடர்ந்த அவஸ்ரேலிய அணி 5 விக்கெட்டுக்களைத் தொடர்ச்சியாக இழந்து 565 ஓட்டங்களைப் பெற்று தனது இனிங்ஸை இடைநிறுத்தியது.

இதன் மூலம் அவுஸ்ரேலிய அணி 115 ஓட்டங்கள் முன்னிலையில் காணப்பட்டு தென்னாபிரிக்க அணிக்குத் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை வழங்கியது. துடுப்பாட்டத்தில் அவுஸ்ரேலிய அணி சார்பாக மைக்கல் கிளார்க் ஆட்டமிழக்காமல் 259 ஓட்டங்களையும் எட் கொவான் 136 ஓட்டங்களையும் மைக்கல் ஹசி 100 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மோர்னி மோர்க்கல் 3 விக்கெட்டுக்களையும், டேல் ஸ்ரெய்ன் ஒரு விக்கெட் டையும் கைப்பற்றினர். இந்த இனிங்ஸில் தென்னாபிரிக்க அணி 23 முறையற்ற பந்துகளை வீசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

115 ஓட்டங்கள் பின்னிலையில் காணப்பட்ட நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றுக் காணப்பட்ட போது போட்டியை வெற்றி தோல்வியின்றி முடித்துக் கொள்ள அவுஸ்ரேலிய அணி சம்மதித்ததையடுத்துப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைவதாக அறிவிக்கப்பட்டது.




துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஜக்ஸ் கலிஸ் 49 ஓட்டங்களையும் ஹசிம் அம்லா 38 ஓட்டங்களையும் ஏ.பி.டி. வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்ரேலிய அணி சார்பாக ஜேம்ஸ் பற்றின்சன், நேதன் லையன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பீற்றர் சிடில் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 450 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்ததோடு,

இப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் மழை காரணமாக முழுமையாக இடம்பெற்றிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

போட்டியின் நாயகனாக அவுஸ்ரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவானார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 15.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது